6047

இலவச வெளியீடு

உ



முருகன் துணை




# கதிர்காமத் திரு முருகன்

இறைவன் திருவருளால்
நீங்கள் சுகஜீவிகளாக வாழ
வேண்டுமெனப் பிரார்த்திக்கிறோம்.



உங்கள் வியாதி எது வாயினும்சரி எம்மை சந்தித்து, தகுந்த ஆலோசனையைப்பெற்ற பின்னர் மருந்தை உட்கொள்ள வேண்டுகிறோம்.

கடந்த 64 வருடங்களாக அனுபவம் பெற்ற எமது

## ரிஷி மருந்துகள்

இலங்கை எங்கும் பிரபல வியாபாரிகளிடம் பெற்றுக் கொள்ளலாம்.

ஆயுர்வேத டாக்டர்

**T. H. மதுரநாயகம்**
(வைத்தியராஜ்)

**ஞானசுந்தர வைத்தியசாலை**
187, செட்டியார் தெரு,
கொழும்பு-11.

# கதிர்காமத் திரு முருகன்

335.5 NAT AR|PB

★

'தொண்டன்' ஆசிரியர்

திரு. எஸ். எஸ். நாதன்

அவர்கள்

தொகுத்தது

★

A. M. P. S. செல்லச்சாமி நாடார் அன் பிரதர்ஸ்

அவர்கள்

பேராதரவால் அச்சிட்டு

அன்பளிப்பாக விநியோகிக்கப்பட்டது.

5 ம் பதிப்பு 20-7-65

P 5714

# சாந்தி

இப்புத்தகம் எழுதி முடிந்தபோது, எனது அரசியல் தந்தையும், பதுளை சமத்துவ சங்க ஸ்தாபகரும், தமிழறிஞருமான தலைவர் வ. ஞானபண்டிதன் அவர்கள் இறைபடி எய்தினார்கள். இக் கருமத்தை நிறைவேற்றினாலொழிய மனச்சாந்தி அடையாது என இதனைப் பிரசுரித்துள்ளேன். அவர்களின் ஆத்மா சாந்தியில் நிலவட்டும்.

நற்பிட்டிமுனை,
கல்முனை
10-5-1964.

எஸ். எஸ். நாதன்
(தொண்டன் ஆசிரியர்)

(முன்னாள் பதுளை, சமத்துவ சங்க கதிர்காம தொண்டர் படை காரியதரிசி)

# எமது நோக்கம்

திரு. கதிர்காம வரலாறு பற்பல விதமாக வெளியிடப்பட்டுள்ளது. அவற்றுள் சில ஆதாரப்பூர்வமான உண்மையாகும். ஏனையவைகள் கட்டுக்கதைகள் என்பதில் கிஞ்சிற்றும் ஐயமில்லை. எழுதி வெளியிட்டோர்களில் கண்ணியமிக்க பெரியார்களும் உளர். எனினும் முருகபக்தி மேலீட்டால் கேட்டறிந்தவை யாவும், உண்மையென்று நம்பி வெளியிட்டிருக்கின்றனர்.

உதாரணமாக மூலஸ்தானத்தில் இப்பொழுது விக்கிரகம் இல்லை என்றும், யந்திரத்தையே திருவிழாக் காலங்களில் ஊர்வலமாக எடுத்துச் செல்கின்றனர் என்றும், முருகன் இலங்கை வந்து வள்ளியுடன் தங்கிவிட்டமையால் பெருமானை அழைத்துப் போக தெய்வானை அம்மன் தூண்டுதலினால் முத்துலிங்க சுவாமி வந்தாரென்று ஒரு சாராரும், இதே நோக்கத்தோடு சிருங்கேரி சங்கராச்சாரியார் மடத்தைச் சேர்ந்த கல்யாணகிரி என்ற பிராமணச் சந்நியாசி கதிர்காமம் வந்து தனது எண்ணம் ஈடேறுததினால் தெய்வானை அம்மையாரையும் அழைத்து வந்து கோவில் கட்டி கதிர்காமத்திலேயே தங்கும்படி செய்தாரென்றும், இது நடந்தது 1-வது இராஜசிங்கன் காலத்தில் என்றும், எவ்வித பொருத்தமற்ற வியாக்கியானங்கள் வெளிவந்திருக்கின்றன. ஆகவே கதிர்காமத்தின் மகிமையையும், பெருமையையும் உள்ளூர உணர்ந்த நண்பர்கள் கேட்டுக் கொண்டதற்கிணங்க கடந்த 50 ஆண்டுகளாக நான் ஆராய்ந்து அறிந்த உண்மைகளை மட்டும் இங்கு குறிப்பெழுதி எமது சங்கக் காரியதரிசி, திரு. எஸ். எஸ். நாதன் அவர்களிடம் கொடுத்துள்ளேன். அவைகளை விவரித்து எழுதி எல்லோரும் வாசிக்கும் வண்ணம் பிரசுரிப்பார் என எண்ணுகிறேன். சிங்கள மக்கள்வேறு, நாம் வேறு, அல்ல என்பதையும், கதிர்காம ஆலய நிர்வாகத்தில் தமிழ் மக்களுக்கு உரிமை இருக்கவேண்டுமென்பது பற்றியும், சிங்களம் நம் கன்னித் தமிழில் இருந்து பிறந்தது என்பதையும் ஆதாரபூர்வமாக எடுத்துக்காட்ட வேண்டுமென்பதே எமது உள்ளக்கிடக்கை.

முருகன் திருவுளம்.

17-11-53 **வ. ஞானபண்டிதன்.**

பதுளை. சமத்துவ சங்கத் தலைவர்.

# அணிந்துரை

திரு கதிர்காமத் தொண்டர் படைக் காரியதரிசியும், தொண்டன் ஆசிரியருமான திரு. எஸ். எஸ். நாதன் அவர்களை யான் சிறிது நாட்களாகவே அறிவேன். ஆயினும் இவரது ஆய்வுத் திறனும் அறிவாற்றலும், பல்லோருடனும் பழகி வாழும் பண்பாடுறை குணமும் எம்மை இவர்பால் ஈர்த்ததில் வியப்பொன்றில்லையென்க.

திரு. நாதன் அவர்களின் பன்நெடுங்கால அயரா உழைப்பின் பயனாய் ஆய்ந்தளிக்கப்பட்ட திரு. கதிர்காம முருகன் என்னும் சரித்திரப் பொதிகையாய் அமைந்த நூலை என் சிற்றறிவுக்கியைய நனி நுணுகி ஆராய்வு செய்தேன். தடி எடுத்தவனெல்லாம் தண்டல்காரனாகும். இக்கால எல்லையில் புற்றீசல்போல் புத்தகம் எழுதுவோர் பல்கிய இற்றை நாளில், பழமையில் புதுமை கண்டு சரித்திர வரலாறு தெரியாது தத்தளித்து, தப்பாக முரண்பட்டுக் கொள்ளும் மனிதர்களின் கலங்கரை விளக்கமாய்க் காட்சி தருகிறது இந்நூல்.

சிங்களவர்கட்கும் செந்தமிழர்கட்குமுள்ள தொடர்பை, விஜயன் பாண்டியன் மகளை விவாகம் செய்த தொடர்பு கொண்டு தமிழின் அடிப்படையிலேயே சிங்களம் தோன்றியதெனவும், எடுத்துக்காட்டுவதன் மூலம் எடுத்துக் காட்டி, விளக்கப்பட்டிருப்பது மெச்சத்தக்கது.

கதிர்காம ஆலய வழிபாட்டு முறைகளில் தமிழர்கட்கும் சிங்களவர்கட்கும் சரிசம உரிமை உண்டென்றும், ஆலய நிருவாகத்தில் சைவசமயிகளே உரித்துடையவரென்றும் ஆதாரப்பூர்வமாக சுட்டிக் காட்டியிருப்பது நயத்தகு நன்மை பயக்குமென்பதில் ஐயமில்லை.

அனுச்சாரத்தின் அறைகூவலாய் அமைந்த பால்குடி பாவா பள்ளியை பக்கீர் மடமென்றும் இற்றைக்கு 135 வருட வயதையுடைய அம்மடம் இந்திய பக்கீர் சாய்புகள் தங்கு மடமென்றும், அஃதை கொழும்பு தாவூஸ் என்பவர் பதுளை நீதிஸ்தலத்தில் வாதாடி D. C. 100-ம் இலக்க வழக்கு மூலம் முஸ்லீம்கட்குரிய பள்ளியாகப் பெற்றாரென்றும் ஆசிரியர் விளக்கம் தருகின்றார். எனவே இதிகாச இனிமை ததும்பும் இந் நூலை மக்கள் பெரிதும் விரும்பிக் கற்றல் சாலச் சிறந்ததென்பது என் துணிபு.

தமிழ் வித்தகன்.
சம்மாந்துறை, E P.

**எம். ஐ. எல். பக்கீர்தம்பி,**
ஆசிரியர் 'ஈழமேகம்'

S. A. RAMACHANDRA TOGO
*Manager*
**K. DARWIN & CO, LTD.**
*Agent*
LIFE INSURANCE CORPORATION OF INDIA

633, Prince of Wales Avenue
**COLOMBO-14**

# மதிப்புரை

ஸ்ரீ S. S. நாதன் அவர்களால் எழுதப்பட்ட "ஸ்ரீ கதிர் காமமுருகன்" என்ற புத்தகம் எனது பார்வைக்காக இலவசமாக அனுப்பப்பட்டது. இதே போல் இச் சிறிய நூலை படிக்க விரும்புகிற முருக பக்தர்களுக்கு இலவசமாய் விநியோகிக்கும் கருத்தோடு இதன் ஆசிரியர் திட்டமிட்டு செயலாற்றி வரும் பணியை பெரிதும் பாராட்டுகிறோம்.

இந்த நூலை அதன் ஆசிரியர் இலங்கை இந்திய சரித்திரவாயிலாகவும், பல்வேறு இதர நூல்கள், கல்வெட்டுகளின் ஆராய்ச்சி வாயிலாகவும் தொகுத்து வெளியிட்டிருப்பதற்காக தமிழ் மக்கள் பெரிதும் கடமைப்பட்டிருக்கிறார்கள்.

இதன் அடுத்த பதிப்பில், மற்றும் பல முக்கியமான விடயங்களை சேர்த்து, கூடுதலான பக்கங்களுடன் வெளியிட்டு, பக்தர்களுக்கு இலவசமாய் வழங்கத் திட்டமிட்டிருப்பதை, ஒரு அரிய சேவை எனவும், சாதனை எனவும் கொள்ள வேண்டும். இதனை கண்ணுறும், அன்பர்கள், இந்நூல் மேலும் பல பதிப்புகளைப் பெற்று, இலவசமாய், தமிழகத்தோர் அனைவரின் கரங்களிலும் பிரகாசிப்பதற்கு வேண்டிய உதவியையும் வசதியையும் இதன் ஆசிரியருக்கு உவந்தளிப்பது அவர்களது கடமையாகும்.

இங்ஙனம்
**சி. அ. இராமச்சந்திரன்**

கொழும்பு

"இன்னு செய்தார்க்கும் இனியவே செய்யாக்கால்
என்ன பயத்ததோ சால்பு"

**கந்த முருகேசன்**
தமிழாசிரியன்

**'தமிழகம்'**
புலோலி தெற்கு
பருத்தித்துறை

# மதிப்புரை

*ஸ்ரீ கதிர்காம முருகன் எனப் பெயரிய சிறு சுவடி யொன்று என் கைக்கெட்டியது. அது உருவத்தாற் சிறிய தாயினும் பொருளாற் பெரியது. திராவிடர் ஆரியர் என் போர் வேற்றினத்தவரென்பதைச் சுட்டிச் செல்கின்றது. ''தொண்டன்'' ஆசிரியர் நாதன் அவர்களாற்ருெகுக்கப் பட்டது. முருகன் தமிழர் கடவுளென்பதை வலியுறுத்து கின்றது. தமிழின் பெருமையைப் பட்டாங்கு கூறுகின்றது. கதிர்காமம், முருகன் வரலாறுகளைப் பஃறலைப்படக் கூறு வார் கூற்றையெல்லாமொதுக்கி ஒருவாறு உண்மை தெரிந்து விளக்குவது இச்சுவடியே போலும். தமிழார் வந் தலைதூக்கி மிளிர்கின்றது இச்சுவடியில்; எனினுஞ் சில வட சொற்களும் இடையிடையே விரவியுள்ளன.*

*இந்நூலாசிரியர் போன்ற தமிழார்வம் படைத்த இளை ஞரொரு நூற்றுவராதல் நம்மீழத்துளராயின் தமிழுந் தமிழருந் தலைதூக்கல் கூடுமென்பது ஒருதலையாய உண் மையே.*

*இச்சுவடியை நாதன் அவர்கள் விலையின்றி வழங்கு கின்றனர். பெரும் பொருள் படைத்தோர் தம் பொரு ளிற் சிறு பகுதியாவதுதவி இவரது முயற்சிக்கு ஊக்கமும் ஆக்கமுமளித்தல் பேரறமாகும்.*

மலைநாட்டுத் தமிழர் நம்மவரே. நாமும் அவரும் ஓரினத்தவரே. அவர் வாழ்வு நம்வாழ்வு. அவர் தாழ்வு நந்தாழ்வு. இவ்வுண்மையை உணர்ந்த நாதன் அவர்கள் மலைநாட்டுத் தமிழர் முன்னேற்றத்துக்குத் தம்மாலான முயற்சியைச் செய்கின்றாரென்பதறிந்து என்னுள்ளந் துள்ளி உவகைக் கடலில் நீந்தி விளையாடுகின்றது. இவரது வழியை ஏனைய தமுழிளைஞர்களும் பின்பற்றுவாராக.

தமிழர்க்குப் பல்லாற்றானும் பயன்படுவதோர் சுவடி ஸ்ரீ கதிர்காம முருகன் என்பது என் கருத்தாகும். ஆராய்ச்சி நூலாதலின் திருத்தங்கள் ஏற்படக்கூடுமென்பது சொல்லாமலே அமையும். இச்சுவடியின் பெயர் கதிர்காமத் திரு முருகன் என்றாவது, திருக் கதிர்காம முருகன் என்றாவது இருத்தல் வேண்டுமென்பது என் விழைவு. திரு. நாதன் அவர்கள் இன்னும் பல முயற்சிகளிலீடுபட்டுத் தமிழுலகிற்கு நன்மை புரிந்து பேரும் பீடுமாக பெறுவாராக.

தமிழுலகம் இவரது முயற்சியை வரவேற்றுப் பயன் பெறுவதாக.

அன்பன்
கந்தமுருகேசன்

# இவ்வெளியீடு

கதிர்காமத் திரு முருகன் 5-ம் பதிப்பாக வெளிவருகிறது. இந்நூலாசிரியர் திரு. எஸ். எஸ். நாதன் அவர்களின் முயற்சியை பெரிதும் பாராட்டுகிறோம்.

24-5-65ல் இறைபதமடைந்த, எங்கள் அன்புத் தமையனார் A. M. P. S. செல்லச்சாமி நாடார் அவர்களின் ஞாபகார்த்தமாக வெளியிடப்படுகிறது. இஃது ஓர் அன்பளிப்பு நூலாகும்.


**A. M. P. S. செல்லச்சாமி நாடார் அன் பிரதர்ஸ்**
லோவர் வீதி, பதுளை

139, நாலாம் குறுக்குத் தெரு,
கொழும்பு.



உருவாய் யருவா யுளதா யிலதாய்
மருவாய் மலராய் மணியா யொளியாக்
கருவா யுயிராய்க் கதியாய் விதியாக்
குருவாய் வருவா யருள்வாய் குகனே.





காலஞ் சென்ற சைவ நற்பணியாளர்

திரு. தூ. செல்லசாமி நாடார் அவர்கள்

# முருகன் துதி

**உதியா மரியா உணரா மறவா**
**விதிமால் அறியா விமலன் புதல்வா!**
**அதிகா அநகா அபயா அமரா**
**விதிகா வலசூ ரபயங் கரனே.**

நம் அழகுத் தெய்வம், குலதெய்வம், திரு முருகன் கோவில் கொண்டிலங்கும் திருத்தலங்களுள் '**கதிர் காமம்**' பெருமை வாய்ந்ததும், பழமை மிகுந்ததும், என்பதற்குச் சான்றுகள் பல உள. என்பது சைவ சமய அன்பர்கள், புராணங்கள் வாயிலாகவும் சங்க நூல்கள் திருமுருகாற்றுப் படை, திருப்புகழ் ஆதியன மூலம் தெரிந்துகண்ட உண்மை.

## முருகன் ஆரியக் கடவுளா?

ஆரியர்கள் சிவாலயங்களை நிறுவினர்களேதவிர நம் குலதெய்வமாகிய முருகனுக்கு ஆலயம் அமைக்க இடங் கூடத் தரவில்லை என்பதை நிரூபிக்க அநேக ஆதாரங் கள் இருக்கின்றன. தமிழ் வேந்தனாகிய இராவணேஸ்வரன் காலத்தில் ஏறக்குறைய 4,000 வருடங்களுக்கு முன் திரு கதிரையம்பதியில் கந்தக் கடவுளுக்கு ஆலயம் உண்டா யது.

திராவிடச் சக்கரவர்த்தியாகிய இராவணப் பெரியார் சிவபக்தனே எனினும், திராவிடத் தெய்வமாகிய முரு

கனை; தம் குலதெய்வமாக வழிபட்டு வந்தார்கள் என்பது மட்டும், மறுக்க முடியாத உண்மை. நம் முருகனின் திருநாமங்களுள் கலியுகவரதன், கண்கண்ட தெய்வம், குலதெய்வம், திராவிடக்கடவுள், என்பவைகளின் பொருளை உணர்ந்தால் திரு முருகன் நந்தமிழ் மக்களின் சந்ததியை உய்விக்கத் தோன்றிய கலியுக வரதன் என்பது புலனுகும். இப்பெருமானை பூஜிக்க ஆரியர் தம் உதவி வேண்டுவதில்லை. முருகனை கலியுக வரதனென்று நம் பழந் தமிழ் மக்கள் அழைத்துவந்ததை நோக்குமிடத்து கலியுக காலமாகிய 4500 வருடங்களுக்கும் பின்னரே முருகனின் நாமம் பரிணமித்திருக்கவேண்டுமென்பது துணிபு.

வட நாட்டில் முருகன் ஆலயம் இல்லை. வழிபடுவாருமில்லை. ஆகவே முருகன் திராவிடத் தெய்வமென்பதில் கிஞ்சிற்றும் ஐயமில்லை. "வடநாட்டிலுள்ள சிவாலயங்களில், சுவாமிக்கு அர்ச்சனை செய்யும்போது ஷண்முகாயாநம என்று சொல்லுகிருர்கள்.

வழிபடுவார் இல்லை எனச் சொல்லுவது பொருந்தாது என சரித்திரம் படித்த ஆசிரியர்கள், பத்திரிகாசிரியர்கள் சொன்னுலும் இன்றும், வடநாட்டு யாத்திரீகர்கள் தென்னுட்டிற்கு வரும்போது, சிவாலயங்களைத் தான் தரிசித்துப் போகிருர்களே தவிர (விசேடமாக, கன்னியா குமரி, தரிசனம் செய்வர்) திருச்செந்தூர், பழனி முதலிய முருகஸ்தல யாத்திரை செய்வதில்லை என்பதை இவ்வாசிரியர்கள் குறித்துக்கொள்ளவேண்டும்.

அது ஒன்றே ஆரியரின் நிலையை உணர்த்த போதுமான சான்ருகும்.

இராவணனுக்குப் பின் இந்நாட்டின் பெரும் பாகத்தை கடல் கொண்டுவிட்டது. இது கடைச் சங்கக் காலத்தில் சுமார் 3,500 வருடங்கள் என்று ஆராய்ச்சி

யாளர்கள் அனுமானிக்கிறார்கள். அதன் பின் இந்தியப் பெரும் பூமிப் பரப்பிலிருந்து இலங்கை பெரிதும் பிரிவுபட்டுவிட்டது. தென் இந்தியாவில் வானரங்களின் தலைவனான அனுமான் ஸ்ரீ ராமனுக்கு உதவி செய்ததாக இராமாயணம் கூறுகிறது.

உண்மையைக் கூறுமிடத்து இராமாயணக் கதையானது ஆரியர்கள் தென்னாட்டின் மீது படையெடுத்துச் சென்றபோது அவர்கட்கும் திராவிடர்கட்கும் இடையே நடந்த சண்டையைப்பற்றிக் கூறுகின்றதெனச் சொல்லலாம். திராவிடர்களில் ஒரு வகுப்பினரையே வானரர்கள் என அழைத்தார்கள் என உலகம் போற்றும் பாரதப் பிரதமர் நேரு சொல்கிறார். (ஜவகர் கடிதம்.31 பக்-177) ஆரிய அரசன் இராமபிரான் இலங்கையை அழிக்க போர்க்கோலங்கொண்டு தமது சந்ததியினர் உதவியுடன் இங்கு வந்தபோது ஒரு சிறு சமுத்திரப்பிரிவே இருந்தது. இதனைக் கடக்க அணை போட்டு வந்துவிட்டார்கள் என்று இராமாயணம் கூறுகிறது. அவ்வணையின் சிறு பகுதியை இன்றும் பாம்பன் என்ற ஊரில் நாம் பார்க்கலாம்.

பாரத நாட்டில் பாடல் பெற்ற திருக்கேதீச்சுரம் என்ற சிவ ஸ்தலம் இன்று இலங்கையில் மன்னாருக்குப் பக்கத்தில் இருக்கிறது. இந்தப் பழம் பெரும் திருப்பதி கலியுக ஆரம்பத்தில் உண்டான ஜலப் பிரளயத்தில் மறைந்து மணல் மேடாக இருந்ததை இந்த இருபதாம் நூற்றாண்டில் சிவ பக்தர்களால் கண்டுபிடிக்கப்பட்டு இப்போது புனருத்தாரணம் செய்து, பழைய நிலையில் பரிணமிக்க இலங்கை வாழ் சைவ மக்கள் ஏற்பாடு செய்து வருகிறார்கள்.

திருக்கேதீச்சுரத் திருப்பணிச் சபை புனருத்தாரண வேலையில் ஈடுபட்டு, திருப்பணி வேலைகள் அநேகமாக பூர்த்தியான நிலையில் வந்துவிட்டன. சைவப் பெருமக்கள் பண்டைய திருக்கேதீச்சுர சீர்திருத்தத்திலும்

முன்னேற்றத்திலும் அதிக சிரத்தையுள்ளவர்களாக இருக்கிறார்கள் என நம்ப இடமிருக்கிறது

தன்னலங்கருதாது உழைக்கும் கொழும்பு புறக்டர் திரு. எஸ். சிவசுப்பிரமணியம் அவர்களும் மிகுந்த பிரயாசையுடன் அரும்பாடு படும் முன்னாள் சமூக சேவா மந்திரி சர். கந்தையா வைத்தியநாதன் அவர்களும் செய்துவரும் பெருமுயற்சியால் இவ்வாலயம் பழைய நிலையில் மிளிரும் என்பது மட்டும் நிச்சயம். ஆகவே இலங்கை இந்தியாவுடன் இணைக்கப்பட்டிருந்து பின்னரே பிரிவுற்றுள்ளது என்பது இதனால் நிரூபணமாகும்.

## இயக்கர் - நாகர்

இராவணனுக்குப் பின் இந்நாடு ஆள்வோரற்று நாளடைவில் பாழாகிவிட்டது, அக்காலத்தில் இருந்த மக்களில் தாய் நாடு சென்றவர்கள் போக எஞ்சியிருந்தவர்கள் நாகரீகமிழந்து காட்டினர்களாக வாழவேண்டிய துர்ப்பாக்கியம் பெற்றுவிட்டார்கள். இவர்கள் முருகப் பெருமானை மறந்தார்களில்லை. தாங்கள் வேட்டையாடியுண்ணும் யான் கறியை முருகனுக்கும் படைத்து நிவேதனம செய்து போற்றிப் புகழ்ந்து வாழ்ந்து வந்தார்கள். இன்றும் திரு முருகனுக்கு சனிக்கிழமை முழுக்கு பிரசாதமாம். ஆனால் ஆலயம் பராமரிப்போரின்றி சீர் கேடடைந்து நாளடைவில் பாழாகிவிட்டது.

## விஜயன் வருகை

வட இந்தியாவில் மகத தேசத்தின் ஒருபகுதியை ஆட்சி புரிந்து வந்த சிங்கபாகு என்பவனின் புத்திரன் விஜயன் என்பவன் கி.மு. ஆறுவது நூற்றாண்டில், இற்றைக்கு 2450 ஆண்டுகட்கு முன்னர் இலங்கை வந்து ஆட்சிபீடமமர்ந்தான். சிங்கபாகு, என்பவனின் பிறப்பும், சிறப்பும் சரித்திர ஆசிரியாகளால், பலவாறு கூறப்பட்டுள்ளது.

கலிங்க தேசத்தையடுத்துள்ள, சிங்கபுரம் எனும் பகுதியை ஆட்சிபுரிந்தவன் சிங்கபாகு அவனின் புத்திரனே விஜயன் என்பான், என்றும் கூறுகின்றனர். எது எப்படி இருப்பினும் இவ்வரசனின் பத்தினி பாண்டிய அரச வம்சத்து மங்கை நல்லாளாகும். ஆனல், விஜயன் பாண்டிய வம்சத்து மங்கையல்ல யாழ்ப்பாணத்துக் கதிரை மலையை உள்ளடக்கிய பிரதேசத்தை அரசாண்ட நாக அரசனின் மகளையே மணந்தானென்று முதலியார் செ. இராசநாயகம் அவர்கள் எழுதிய யாழ்ப்பாணச் சரித்திரத்தில் கூறுகிறார். (யா. ச. பக-2) அவனல் இந் நாட்டில் குடியேற்றப்பட்டவர்களும் திராவிடர்களே யாகும்.

இவ்வரசனின் பின்னர்தான் இந்நாட்டிற்கு சிங்ஹல எனு ஒரு தனி பாஷை தமிழிலும் - வட மொழியிலிருந்தும் புத்தம் புதிதாக ஆக்கப்பெற்றது. பாஷை சிறிது வேறுபாடு அடைந்திருந்தாலும் இன்றையவரை இந்நாட்டு சிங்களத்தாரின் பழகக, வழக்க, ஊண், உடை, நாகரீகம் ஆதியன திராவிடத்தாரைத் தழுவி இருக்கிறதே தவிர ஆரியரென்ற வட நாட்டாரைத் தழுவியதல்ல, இவ்வுண்மைகளைக்கொண்டு இந் நாட்டின் பூர்வீக மக்களாகிய இயக்கர் நாகர் என்பவர்களும் பின் வந்தவர்களும் தமிழர்கள் என்பதும் அவர்களின் குல தெய்வம் திரு முருகன் என்பதும் உள்ளங்கை நெல்லிக்கனி போல் தெளிவாகின்றது.

## பௌத்த மதமும், சிங்களமும்

விஜயனுக்குப் பின் பண்டுவஸ்தேவ (பந்துவாசன்) அபய (அபயன்) பாண்டுகபாய (பாண்டுகபாயன்) முட்டசிவ(மூத்தசிவன்) என்ற ஆரிய அரசர்கள் சுமார் 236 வருடங்கள் வரை இலங்கையை ஆண்டு வந்தார்கள். அது காலை சிவமதமே பொதுவாகவும், முருக வழிபாடு தலை சிறந்ததாகவும் இருந்துவந்தது. அதன் பின் ஆட்சி புரிந்துவந்த தேவநம்பிய திஸ்ஸ என்ற அரசன் காலத்

தில் வட இந்திய மன்னன் அசோகச் சக்கரவர்த்தியின் புதல்வி சங்கமித்த பிக்ஷுணி, புத்திரன் மஹிந்தா பிக்ஷு ஆகியவர்களால் இந்நாட்டிற்கு பௌத்த மதம் கொண்டு வரப்பட்டது. அதன் பின்னரே இந்து மதத்தினர் தமிழர்களென்றும் பௌத்த மதத்தைத் தழுவியவர்கள் சிங்களவர்களென்றும் கூறுகப் பிரிக்கப்பட்டார்கள்.

## மதப்போரும் ஜாதிப்போரும்

இந் நாட்டின் பூர்வீக மதமான இந்து மதம் மாறிய பின் மதச் சண்டை மூண்டு இடையிடையே உள்நாட்டுக் கலவரங்களும், பிற நாட்டரசர்கள் படையெடுப்பும் மலிந்துவிட்டமையால் செல்வம் கொழித்த இந் நாடு காடு மேடாகச் சீரழிந்துவிட்டது என்பதற்குச் சான்றுகள் சிங்கள வம்ச சரிதமாகிய மகா வம்சத்திலும், அனுராதபுரி, பொலனறுவை, சீகிரிய, தம்புல, தஞ்சை நகரம், கதிர்காமம் முதலிய நகரங்களின் வனப்புகள் குன்றி, ஆங்காங்குள்ள ஆலயங்கள் அழிந்து காடாய்க் கிடக்கும் தன்மையிலிருந்தும் ஊகித்தறியலாம்.

மேலே கண்ட உண்மையிலிருந்து முருகப் பெருமான் திராவிடர்களின் குலக் கடவுளென்றும் அக்கடவுள் ஆலயம் சிங்ஹல வம்சத்தை உற்பத்தி செய்த விஜயனுக்கும் முன்னுள்ளதென்றும் ஒரு அணுவும் சந்தேகமின்றிக் குறித்துக்கொள்ளவேண்டும்.

சேர நாட்டு மன்னன் ஏலாளன் ஆட்சி புரிந்த காலம் 2123 வருடங்களுக்கு முன் வரை கதிர்காமம் ஆலயம் தமிழர்களின் ஆதிக்கத்திலேயே, நம் சமய விதிகளின்படி மூர்த்தி வடிவமான முருகனுக்கு, அலங்கார அபிஷேக, தூபதீப, ஆராதனையாகிய சோட சோப அலங்காரங்கள் செய்யப்பட்டு வந்திருக்கிறது என்பதற்கு போதிய ஆதாரங்கள் இருக்கின்றன. அவைகளில் சிலவற்றை இச் சிறு நூலில் தருகிறோம்.

# துட்டகைமுனு அரசனும் முருகனும்

இற்றைக்கு சுமார் 2138 வருடங்களுக்கு முன் திஸ்ஸ மகாராம என்ற நீர் நில வளம் பொருந்திய நாட்டை உள்ளடக்கிய மகாகம என்ற இடத்தை தலைநகராகக் கொண்டு ஆட்சிபுரிந்து வந்த காவந்திஸ்ஸ (காவந்தீசன்) என்ற சிற்றரசன் சேர நாட்டுச் சக்கரவர்த்தி ஏலாளன் என்பவருக்குக் கப்பம் கட்டுவதை அவன் மைந்தன் துட்டகைமுனு விரும்பாமல் தமிழ் மன்னனுடன் போர் புரிய எண்ணங்கொண்டான். ஆனல், தந்தை விரும்பாமையினல் கைவிட்டும், எண்ணம் மாருமல் அதே விரதமாய் இருந்து, ஜாதி மத பேதத்தைக் காட்டுத் தீ போல் பரப்பலானன். இன்றும் சில அரசியல் தகடு தத்தப் பேர்வழிகள் அவ்விதம் செய்வது கண்கூடு. (1958 - வருட வகுப்புக் கலவரம் இதற்குச் சான்று)

மக்கள் அரசாங்கம் என்று, சொல்லிக்கொண்டு இந் நாட்டில் இப்போது நடந்து வரும், கெடுபிடி உண்மையில், மீண்டும் இன பாகுபாட்டைத்தானே கொண்டு வந்து விடும்.

(சிறுபான்மை மக்கள் படும் பாடும் இலங்கை இந்தியப் பிரச்சனையும் மற்ருேர் சான்ருகும்.

கதிர்காமக் கடவுளிடம் வரம் பெற்ருலன்றி அனுராதபுரத்துத் தமிழ் வேந்தனை போரில் வெற்றி கொள்ள முடியாதென கனவு கண்டான். அவ்வாறே யாத்திரை சென்று மாணிக்ககைக்கங்கை நதிக்கரையிலிருந்து தவம் செய்ததாகவும் வேலன் பண்டார வடிவத்துடன் காட்சியளித்து வரங்கொடுத்ததாகவும்' வெற்றியின் பின்னர் முருகனுக்கு ஆலயம் நிறுவித் தருவதாகவும், துட்டகைமுனு செய்துகொண்ட பிரதிக்ஞைக்கிணங்க ஆலயத்தைக் கட்டிவித்தான் என்றும் இலங்கை பூர்வீக சரித்திர ஆராய்ச்சியாளராகிய டாக்டர் எம். கோவிங்டன் (Dr. M. Covington in Orientlis - T. Vol III)

எழுதியிருக்கிறார். இதில் பௌத்தர்களைப் புறக்கணித்து இந்து கதிர்காம (Hindu Kataragama) என்றும் The God appeared - to him in the Shape of a Pandaram & Promised Victory) கதிர்காமக் கடவுள் பண்டார வடிவுடன் தோன்றி வரங்கொடுத்தார் என்றும் தெளிவாக எழுதி இருக்கிறார். இதன் கருத்துக்களை ஆராயுமிடத்து கதிர்காமம் இந்து மக்களின புனித ஸ்தலமென்றும், அங்கு முருகன் ஓர் ஆலயத்தில் எழுந்தருளி இருந்தாரென்றும் அறிவற்றோரும் தீர்மானித்துவிடலாமன்றோ.

முருகன் கருணை புரிந்து வெற்றிவரம் கொடுத்த பின் தமிழ் சக்கரவர்த்தியை வெற்றிகொண்ட துட்ட கைமுனு இலங்கையின் ஏகச் சக்கிராதிபதியானதும் இன்று காட்சியளிக்கும் ஓர் சிறிய ஆலயத்தைக் கட்டுவித்தான் என்பது நம்பக்கூடிய கதையா? என்பதை வாசக நேயர்களின் சிந்தனைக்கே விட்டு விடுகிறேன்.

ஸ்ரீ வள்ளியம்மன் ஆலயம் சிங்கள வம்சம் உற்பத்தியாவதற்கும் ஆரியரின் இந்து மதம் இங்கு இறக்குமதியாவதற்கு முன்னரே இருந்ததாக பாக்கர் (Parker) என்பார் எழுதிய (Ancient Ceylon) பூர்வீக இலங்கை என்ற நூலில் எழுதியிருக்கிறார். இதிலிருந்து காணக்கிடப்பதென்ன? விஜயன் வருமுன் இந்நாட்டிலிருந்த இயக்கர், நாகர், என்ற பழங்குடி மக்களின் குலதெய்வம் வள்ளி என புலனாகவில்லையா? முருகனைப்பற்றி சொல்லவும் வேண்டுமா.

சிங்களப் பண்டிதர்களால் ஆக்கப்பட்ட "கந்த உபத" சந்தர் உதயம் என்ற சிங்கள கிரந்தத்தில் மேலே சொன்ன துட்டகைமுனு முருகன் வரலாற்றைப் பார்க்கலாம். மேலும் 1887-ம் வருடம் முதல் 1889-ம் வருடம் வரை மட்டக்களப்பில் இருந்து வந்த டாக்டர் H. கோவிங்டன் (Dr. Covington என்பார் பிரசுரமாகவும் வெளியிட்டிருக்கிறார். (Literary Supplement of the Examiner and Reprinted in the orientalist Vol 1887 - 1889. P. P. 149 - 156)

## ஆலய பூசை மாற்றமடைந்த காரணங்கள்.

இன்று கதிரையம்பதியில் நடந்துவரும், நூதன வந்தனை வழிபாடுகள் ஐதீகம் ஆதியன ஆதியிலும் இருந்து வந்ததாக நம்முன்னோர் எண்ணிக்கொண்டு உண்மையை ஆராய்ந்தறிய பயந்துகொண்டிருக்கிறார்கள். இப் பிற்போக்கான எண்ணம் இந்துக்களாகிய நம்மவருக்கு புதுமையல்ல. மதவிசாரணை செய்வது மகா பாவம் என்று மதத்தின் பெயரால் வாழ்ந்துவந்த பெரியார்கள் சொல்லிப் போந்த கட்டுக் கதைகள். வாழையடி வாழையாக நம் மக்கள் மரபில் தழைத்தோங்கி வளர்ந்து அறிவாளிகளையும் சமய சமூக விஷயத்தில் கோழைகளாக்கிவிட்டது. நம்மை ஏமாற்றுவோர் செய்த நய வஞ்சகப் புரட்டுகளெல்லாம் உண்மையாகிவிட்டன.

துட்டகைமுனு ஏலாளச் சக்கரவர்த்தியைச் சமரில் கொன்று தனது ஆட்சியை நிலைநாட்டியதும் வலியோர் சிறியோர் மீது வஞ்சம் தீர்த்துக் கட்டுவது இயல்பு தானே. அக்காலத்து இந்து ஆலயங்களில் கதிர்காமம் மகா மகிமையும் திரண்ட சம்பத்தும் கொண்டதாய் இருந்தமையினால் சிங்களக் கலகக்காரர்களின் கண்ணோட்டம் கதிரையம்பதியிலும் சென்றது.

சிங்கள அன்பர்கட்கு ஆறுமுகத்தோடு காட்சியளித்த கந்தப்பெருமானுக்கு ஆபரண அலங்கார சாத்துப்படி தூப தீப நைவேத்தியம் செய்யத் தெரியாமையாலும், துட்டகைமுனுவின் அனுமதிப்படி சுவாமியின் சந்நிதானத்தை திரையினால் மறைத்துவிட்டார்கள். அபிஷேக அர்ச்சனைகள் செய்யத் தெரியாமையால் வாயைக் கட்டிக்கொண்டார்கள்.

துட்டகைமுனு ஆட்சிக்கு வந்தவுடன் கதிர்காமத்திலிருந்த அதிகாரி ஒருவருக்கு எழுதிய ஓலையில் பண்டாரச் சாதியினர் வந்து இந்து சமய முறைப்படி ஆலய பூசைகள் செய்யும்வரை உங்களுக்குத் தெரிந்தபடி

பூசைகள் செய்யுங்கள் என எழுதியிருக்கிறார் எனவும், மேலே சொன்ன ஓலையை தாம் பார்வையிட்டதாகவும் கதிர்காம நாயகா பிக்ஷுவாகிய தம்ம தின்ன பியரத்ன தேரோ எம்மிடம் நேரில் சொன்னார். இது முற்றிலும் உண்மை என்பதற்குப் பல ஆதாரங்கள் இருக்கின்றன.

மக்களின் உளங்களைக் கொள்ளைகொண்ட இயற்கை கடவுளாகிய நம் ஆறுமுகவேலன் ஆலய வழிபாடு மாற்றமுற்றிருப்பினும் அப்பெருமானின் ஒப்புயர்வற்ற திருக்கருணை ஒரு சிறிதும் குன்றாது விளங்குகிறது. இந்த க்ஷேத்திரத்தில் விக்ரகம் இல்லை. பேழையில் அடக்கம் செய்யபபட்ட அக்ஷரம் ஒன்றுமட்டும் இருக்கிறது. அதனையே திருவிழாக் காலங்களில் எழுந்தருளச் செய்கிறார்கள், என்று சர். பொன். இராமநாதன், சர். பொன். அருணாசலம் முதலிய அறிவிற் சிறந்த ஆன்றோர்களையும் நம்பும்படி பிரசாரம் செய்துவிட்டார்கள்.

## தங்கப் பொதிந்த ஆறுமுக விக்கிரகம்

செஞ்சந்தனக்கட்டையால் செய்து தங்கத் தகட்டால் பொதியப்பட்ட ஆறுமுகமும் பன்னிரு கரமுடைய பிரதிஷ்டை ஒன்று இன்னும் இருக்கிறது என்பது மறுக்க முடியாத உண்மை இவ்வுண்மையைக் கொஞ்சமும் தயக்கமின்றி நிரூபிக்க 1922-ம் வருஷத்துற்கு முன் பஸ்நாயக்காவாக இருந்த திரு. உள்விட்ட என்பாரும் கோவில் திருப்பணிகளைச் செய்துகொண்டு 1934-ம் வருடம் வரை கதிர்காமத்திலிருந்த திரு. புஞ்சி சிங்கோ என்பவரும் கதிர்காம பிரதம பௌத்த குருவும் சாட்சிகளாவார்கள். இவர்களின் கூற்றை 1819-ம் ஆண்டு அங்கு சென்ற இலங்கை தேசாதிபதி பிரவுண்றிக் அவர்களுடன் போந்த டாக்டர் டேவி (Dr. Davy) என்பவர் எழுதிய வெளியீட்டில் 421-ம் பக்கத்தில் "விக்ரகம் கோவிலிருந்து அகற்றப்பட்டு காட்டில் மறைத்து வைக்கப்பட்

டிருக்கிறது'' என்று எழுதி விக்ரகம் உண்டு என்பதை நிரூபிக்கிருர். தற்போது திருவிழாக் காலங்களில் மேலே குறிப்பிட்ட முருகப்பெருமான் விக்கிரகத்திலுள்ள ஆறு சின்னங்களையும் (குடை, கொடி, வெண்சாமரம், வேல், வில், அம்பு) வெள்ளிப்பேழையில் பட்டுத் துணியால் சுற்றி அடக்கஞ் செய்து யானை மீது அம்பாரி வைத்து ஊர்வலம் வருகிருர்கள். அத்துடன் இந்து ஆலயங்களில் இருப்பது போன்று இன்னும் கதிரையம்பதியில் சுவாமிக்கு அடுக்குத் தீபம், பஞ்ச ஆலாத்தி தீபம், மூக்குத் தீபம், வெள்ளியினுல் செய்யப்பட்ட குடை, வெண்சாமரம், கொடி, வில், வேல், அம்பு ஆகிய நானுவித சோடசோபாலங்கார பூசைச் சாமான்களும் ஆலயத்துள் இருப்பதை நோக்குமிடத்து முருகனின் மற்றைய ஆலயங்களில் இருப்பதுபோல் இங்கும் இந்து மத ஐதீகப்படி பூசை நைவேத்தியம் நடந்து வந்திருக்கிறது என்பது சந்தேகமற்ற உண்மையாகும்.

## காலத்துக்குக் காலம் ஆலய பூசை மாறிய விதம்

துட்டகைமுனுவுக்குப் பின் தமிழரசர்களின் ஆட்சி புரிந்த காலத்தில் கதிர்காமமும் ஏனைய இந்து ஆலயங்களும் தமிழ் பூசாரிகளாலும், சிங்கள ஆட்சி ஏற்படும் போது சிங்களக் கப்புராளைகளாலும் ஆலயப் பூசைகளும் நிர்வாகங்களும் மாறி மாறியே நடத்தப்பட்டு வந்திருக்கின்றன. இவ்வாறு ஆட்சி மாறுங் காலங்களில் மத விரோதிகள் பல ஆலயங்களை தரை மட்டமாக்கியிருப்பதை இன்றும் அனுராதபுரம், பொலன்னறுவ முதலிய இடங்களில் காணலாம்.

பௌத்த மதம் வந்த காலம் முதல் பிரிட்டிஷ்காரர்களின் ஆட்சி ஸ்தாபிக்கப்பட்ட காலம் வரை இலங்கையில் யுத்த மேகம் சூழ்ந்துகொண்டே இருந்து வந்தது என்பதை பௌத்த சிங்கள வம்ச சரிதையாகிய மகாவம்ஸ நிரூபணம் செய்கிறது.

மகாவம்ஸ என்ற சரிதையை எழுதுவதற்கு விஷய தானம் செய்தவர்கள பௌத் சந்நியாசிகளேயாகும். இவர்கள் தமக்கு வேண்டியதை மட்டும் தந்து தமிழ் சமூகத்தின் சமய, சமூக மேன்மையை வெளிப்படுத்தும் உண்மைகளை மறைத்து விட்டார்கள்.

தேவநம்பியதிஸ்ஸ என்ற மன்னன் காலத்தில் அதாவது (கி. மு. 250) அசோகச் சக்கரவர்த்தியின் புதல்வி சங்கமித்தா பிக்ஷீணியால் புத்தகயாவிலிருந்து கொண்டு வரப்பட்ட அரச மரக்கிளையில் ஒன்று கதிர்காமத்தில் நாட்டப்பட்டிருக்கிறது என்றும் கிரிவிகாரா என்ற பௌத்த ஸ்தூபியை மகாநாக என்ற அரசன் நிறுவினன் என்றும் (இது கட்டியது 12-ம் நூற்றுண்டில் மகாவம்ச அத்தி. 57-ல் சொல்லப்பட்டிடுகிறது. இது இந்துக்களின் நிருவாகத்தில் இருந்தபொழுது பாழடைந்தது.) எழுதிவைத்திருக்கிறுர்களே தவிர முருகப் பெருமான் ஆலயத்தைப் பற்றி ஒரு வரியேனும் எழுதினுர்களில்லை இவ்வாலயத்தில் ஒரு சிறிது உரிமையேனும், சிரத்தையேனும் இருந்திருக்குமாயின் கட்டாயமாகக் குறிப்பிட்டிருப்பார்களன்றே? இவ்வுண்மைகளை (மகாவம்ஸ Mahavansa XIIIP. P. 76-77ம் பககங்களிலும், XLV, 45, LVK, 2, 67, 68. 70, 74 and L VIII, 5-பிரதிகளிலும் காணலாம்.)

இவைகளில் கதிர் வேலாயுதர் ஆலயத்தைப் பற்றிய குறிப்பே இல்லை. வேண்டுமென்றே புறக்கணித்துவிட்டார்கள் என்று எண்ணவேண்டியிருக்கிறது. அது விந்தையல்ல விளக்கிற் பெருகும்.

பௌத்த மதம் விக்ரக ஆராதனையைக் கண்டிக்கிறது எனினும் கதிர்காம ஆலயத்திற்கு ஏலாளச் சக்கரவர்த்தியும் அவனுக்கு முன்னும் பின்னும் ஆண்டு வந்த அரசர்களும், பிறகும் வழங்கியிருந்த சர்வ மான்யங்களையும், விலை மதிக்க வொண்ணுத இரத்தினங்கள்,

ஆபரணாதிகள் முதலியவைகளையும் வசப்படுத்திக் கொண்டு, யாத்திரீகர்கள் அள்ளிக்கொடுக்கும் காணிக்கைகளையும் கபளீகரம்பண்ணிக்கொண்டிருக்கலாமென்ற கெட்ட எண்ணத்துடன், பௌத்த குருமார்களின் ஆலோசனையின்படி முருகப் பெருமானை மறைத்துவைத்துவிட்டார்கள் என்ற எண்ணம் எம்மில் பலப்பட்டுக் கொண்டே இருந்தது.

1635 ல் கண்டியில் இருந்து ஆட்சி புரிந்த இரண்டாவது இராசசிங்கன் என்ற தமிழ் மன்னன் காலத்தில் கதிர்காம நிருவாகம் பௌத்த குருமார்களிடம் இருந்ததை இந்துக்கள் நிருவாகத்தில் விட்விடும்படி கட்டளை பிறப்பித்தான். ஆனால் கொழுத்த வருவாயை விழுங்கிவந்தவர்கள் நிருவாகத்தைத் தரவிரும்பவில்லை. ஆகவே அவர்களை விரட்டி ஆட்சியைப் பெற்று இந்துக்களிடம் ஒப்புவிக்க ஏற்பாடு செய்தானென்றும் சொல்லப்படுகிறது. இவ்வாலயத்தில் நிறைந்திருந்த அளவற்ற திரவியத்தைக் கொள்ளையிட 1642-ல் போர்த்துக்கீசியப் படையும் சென்று, கதிர்காமக் காட்டையும் மலையையும் சுற்றித் திரிந்து கோவிலையே காணமுடியாமல் ஏமாற்றமடைந்து திரும்பிவிட்டது இப்படை கதிர்காமம் போகும்போது இடையில் கண்ட கோவில்களையும் தரை மட்டமாக்கி விட்டுப்போனதோடு தங்களுக்கு வழிகாட்டவந்த தூதர்களையும் சுட்டுக்கொண்றுவிட்டே திரும்பி இருக்கிறது இதில் 150 போத்துக்கீசரும், 2000 ஏனையோரும் இப்படையில் இருந்தாலும் பெரும்பாலோர் கிறீஸ்தவர்கள்.

இப்பபடையின் தளபதி கஸ்பர் பிக்கூரக டி கெர்பே (Gasper Figura de Crip) என்பவனாகும். போர்த்துக்கீசிய பாஷையில் எழுதிய ரிபீரோஸ் சீலாவோ சிலோன் (Ribeior's Ceilao Ceylon) என்ற புத்தகத்தை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தவர் டாக் போல் பீரிஸ் சி. சி எஸ். (Dr. Paul Peris C. C. S) அவர்களாகும். 1597-ல் போர்த்

துக்கீசர் காலம்' என்ற நூலில் டாக்டர் போல் பீரிஸ் எழுதியுள்ளார்கள். இதனை பாகம் - 1 பக்கம் 324 - ல் காணலாம்.

1635-ம் வருடம் முதல் 1817-ம் வருடம் வரை கதிர்காமம் ஜோதி காமமாய் விளங்கியது. 1815-ல் கண்டி இராச்சியம் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் கீழ் ஆனதும் கதிர்காமத்தை உள்ளடக்கிய ஊவாகலகம் ஏற்பட்டது. இது தமிழர், சிங்களவர், ஆங்கிலேயர் கலகமாக இருக்க வேண்டும். இக்கலகம் 1818-ல் வலுவடைந்து 1819-ல் அடக்கப்பட்டு இந்துக்கள் வசம் கதிர்காம நிர்வாகப் ஒப்படைக்கப்பட்டது. ஆலயப்பாதுகாப்புக்காக ஆங்கிலேய அரசாட்சியால் அனுப்பப்பட்ட துருப்புகளால் கைப்பற்றப்பட்ட பின்னர் அப்படை பாதுகாப்புப் படையாக சிறிது காலம் இருந்த பின்னரே நீக்கப்பட்டது. இது 1819-ம் வருட மத்திய காலத்தில் நடைபெற்றது. அப்போது தெய்வானை அம்மன் கோவில் ஸ்தானிகராக இருந்த பெரியார் ஸ்ரீ கல்யாண கிரிபாவா என்பவரிடம் நிருவாகம் ஒப்படைக்கப்பட்டது. 1819-ல் கலகம் அடக்கப்பட்டதும் காட்டில் மறைத்துவைக்கப்பட்டிருந்த விக்ரகம் திரும்பவும் கொண்டுவரப்பட்டு மூலஸ்தானத்தில் வைக்கப்பட்டது, என்று பிரவுண்டிரிக் கவர்ணருடன் சென்ற டாக்டர் டேவி என்பார் 1821-ல் பிரசுரிக்கப்பட்ட அரசாங்கப் பத்திரிகையில் எழுதி வெளியாகியது. அதன்பின் இரு சாராரும் ஆலய நிருவாகத்தை நடத்தி வந்திருக்கிறார்கள். இதற்குச் சரியான ஆதாரங்கள் இருக்கின்றன. கண்டியரசனுக்குப் பின் பலாத்காரமாக கதிர்காம ஆலய உரிமையைக் கைப்பற்றிக் கொண்டிருந்த இரு சிங்களப் பிரமுகர்களாகிய கபலித்தே மகாபெத் மீராளை, அத்தலே குடா பெத் மீராளை என்பவர்களை பிரிட்டிஷ் வீரர்கள் பிடித்துக்கொண்டு சென்றார்கள். அப்பால் அவர்கள் மீளவில்லை என்ற உண்மையை அவர்களின் சந்ததியில் வந்த பழைய பஸ்நாயக நிலமையாகிய உள்விட்ட என்பார் உறுதிப்படுத்துகின்றார்.

அப்பால் 1865-ம் ஆண்டு வரையில் தமிழர்களே கந்தசாமி ஆலய நிருவாகத்தை நடத்திவந்தார்கள் என்று உறுதியாய்ச் சொல்லும் அத்தாட்சியை பதுளையில் நடந்த D. C. 182-ம் நம்பர் வழக்கில் இணைக்கப்பட்டு உறுதிப்படுத்தப்பட்டிருக்கிறது.

1922-ம் வருடத்தில் ஆலய பரிபாலனக் கமிஷன் (H. W. கோட்ரிங்டன் H. W. Godrington) காலத்தில் உள்விட்ட பஸ்நாயக்காவை நீக்கி திரு. G. V. கட்டுகாவை பஸ்நாயக்காவாக நியமித்தார்கள். ஆனால் உள்விட்ட பஸ்நாயக்கா நிருவாகத்தை மாற்றிக்கொடுக்க விரும்பாமலும், கோவில் திறப்புகளைக் கொடுக்காததாலும் பதுளை டிஸ்றிக் கோர்ட் மூலம் ஸ்பெஷல் கேஸ் No. 1 கொடுத்து அப்போது கிளார்க்காக விருந்த திரு. T. சரவணமுத்து அவர்களால் கோவில் பூட்டை உடைத்துத் திறந்து சட்டப்படி ஒப்படைக்கப்பட்டது. திரு. சரவணமுத்து அவர்கள் திருக்கோணமலையில் வன்னியா (இரட்டை மாத்யா)வாகவிருந்து ஓய்வுபெற்றவர்.

## கப்புராளையில் சிலர் தமிழ் பரம்பரையினர்

கி. பி. 1865 ம் ஆண்டு வரை சுமார் 30வருட காலம் வரை கதிர்காமத்தில் வசித்துவந்த வேலுப்பிள்ளை பூசாரி என்பவர் கந்தசாமி ஆலயத்தின் பிரதம பூசாரியாகவும், கோவில் மனேஜராகவும், வள்ளியம்மன் ஆலயத்தின் உரிமையாளராகவுமிருந்து வந்தாரென்பது அவரின் மரணசாசனத்திலும் பதுளை D. C. 182-ம் நம்பர் உரிமைத் தத்துவ வழக்கிலும் நிரூபணம் செய்யப்பட்டு அன்னவரின் மருமகனை திரு. பொன்னையா என்பவருக்குத் தத்துவம் கொடுக்கப்பட்டிருக்கிறது இவரே தற்சமயம் முத்துலிங்க சுவாமி கோவில் தர்மகர்த்தாவான திரு. கந்தையாவின் தந்தையாராகும் அது சமயம் பஸ்நாயக்கா நிலாமையாகக் கடமையாற்றியவர் கட்டுகா பஸ்நாயக்காவின் பாட்டனாராகும். அவர்

பெயரும் கட்டுகா பஸ்நாயக்கா என்பதுதான் அவரும் மேல் குறிப்பிட்டுள்ள உண்மைகளை தனது பெட்டிஷன் வாயிலாக ஒப்புக்கொண்டிருக்கிறார். அம்பனு ஷீ 182-ம் நம்பர் வழக்கில் இணைக்கப்பட்டிருக்கிறது.

வேலுப்பிள்ளை பூசாரியின் உடன் பிறந்த சகோதரி சீதேவி அம்மையைத் திருமணம் முடித்தவர் பாலஹாமி என்ற சிங்கள கப்புராளையாகும். ஒருவாறு இருவரும் சமீபகாலத் தமிழர் வம்சத்திலிருந்து வந்தவர்களாகும். மகாகம ஹப்புகாமி என்ற தேரிய அப்பு, (பழையடவுண் ஆராச்சி) சலமன் கப்புராளை (யானைமேல் வருபவர்) பாரிஸ் அப்பு (பெரிய கோவில் கப்புராளை) இவர்கள் எல்லாம் இந்தச் சந்ததியைச் சேர்ந்தவர்கள் என்பது அநேக யாத்திரை வாசிகட்கு தெரியாமல் இருக்கலாம். இந்த உண்மைகளை நோக்குமிடத்து அவர்கள் வேறு நாம் வேறு அல்லஎன்பது புலனாகும். எனினும் அவர்கள் இன்று காலத்திற்கேற்ப மாறுபாடடைந்தது வியப்பன்று.

## இந்துக்கள் கடமையும், உரிமையும்.

தமிழ் மக்களுக்குச் கதிர்காமம் முத்திஸ்தலமாகும். அங்கு கோவில் கொண்டு எழுந்தருளி இருக்கும் முருகப்பெருமான் எல்லோருள்ளத்தும் தாண்டவமாடும் மகா கருணாநிதி, யோகபூமியாகிய அப்பதி இன்று போக பூமியாகவும், கொலை கொள்ளைகள், காமம், சூது, விபசாரம், ஏமாற்று ஆகிய பாதகச் செயல் மலிந்த பயங்கர பூமியாக மாறிவிட்டது.

விஞ்ஞானக் கலைகளை தினம் தினம் மக்கள் முன் வாரி வீசிக்கொண்டிருக்கும் இந்த இருபதாம் நூற்றாண்டிலே பழமையை விரும்பி நம்மக்கள் வாளாவிருப்பது அறிவுடைமையாகாதன்றோ. ஆய்வும் அர்த்தமும் இல்லாமல் மந்திரிகளில் சிலர் இப்போதும் விதர்ப்பமாய் பேசுவது கண்கூடு. கதிர்காமம் இந்துக்களின் புனித ஸ்தலமென்றும் ஆலயமென்றும், உரிமையாளரென்றும் சொல்லப் பயப்படுகிறார்கள் நம்மக்கள். இவர்களின் மனப்போக்கை நாம் என்னென்பது,

கதிர்காம ஆலய நிருவாகத்தை இந்துக்களிடம் ஒப்புவிக்கவேண்டுமென்று நாம் விரும்பவில்லை. இந்து பௌத்தர்களடங்கிய நிருவாக சபை ஒன்று மட்டும் வேண்டுமென்று (கமிட்டி) விரும்புகின்றோம். இவ்வாலயத்திற்கு முன்னோர்களால் விடப்பட்ட நெல் வயல்கள் ஆயிரக்கணக்கான ஏக்கர்கள் இருப்பதுடன், தேயிலை ரப்பர், தோட்டங்களும், அளவற்ற கருங்காலி, தேக்கு. முதிரை மரக் காடுகளும் சுமார் (50 000) ஐம்பதாயிரம் ஏக்கர் வரை இருக்கிறது. அத்துடன் பல ஆயிரக்கணக்கான ரூபாய்வரை உண்டியலில் வந்துகொண்டிருக்கிறது. இந்த ஆதாயம் பூராவும் இரண்டொருவரின் நலத்திற்கே உதவிவந்தது. யாத்திரீகர்களின் இன்னல் குறித்தோ ஆலயச் சீர் திருத்தம் பற்றியோ கிஞ்சிற்றும் கவனிக்கிறார்கள் இல்லை.

சுவாமிக்கு அலங்காரம் செய்ய, அக்காலங்களில் இருந்த மாலைகளில் கொள்ளை போனதுபோக எஞ்சியவைகளில் சிலவற்றை இப்போது சுவாமி ஊர்வலம் வரும்போது திருவாச்சியில் தொங்கவிட்டிருப்பார்கள். சாதா மாலை. பதக்கத்துடன் முத்துமாலை, அவல்மாலை நெல்லிக்காய் மாலை முதலியவை உள்ளன. இந்தக் கணக்கு 1922 வருடம் திரு. உள்விட்ட பஸ்நாயக்கா நிலாமையை தேவஸ்தானக் கமிட்டியார் நீக்கியபின் மட்டக்களப்பு K. மார்க்கண்டு என்பவரும் கூடவிருந்து சாமான்களைக் நிறுத்து ஒப்புக்கொண்டார்கள். இந்த டாப்பு பதுளைக் கோர்ட்டில் இருக்கிறது. இப்பொழுதும் பார்க்கலாம்.

## வள்ளியம்மன் ஆலயம்

வள்ளியம்மன் ஆலயத்தின் உற்பத்தி எப்போது என்று கணக்கிட்டுச் சொல்லமுடியாது. கிட்டத்தட்ட கதிர்காம ஆலயம் ஏற்பட்டகாலத்திலேயே அதுவும் ஏற்பட்டிருக்கவேண்டுமென்று கூறுவாருமுளர். நிற்க 1865ம் ஆண்டுவரை கதிர்காமத்தில் கோவில் மனேஜ

ராகவும், வள்ளியம்மன் ஆலய உரிமையாளராகவும், இருந்து வந்த வேலுப்பிள்ளை பூசாரியின் மரண சாசனத்தில், உள்ளவைகளை முன்னர் குறிப்பிட்டிருக்கிறோம். இப்போது இருந்து கோவில் நிருவாகத்தை நடத்திவரும் திரு. பாரிஸ் அப்புக்கப்புராளை வேலுப்பிள்ளை பூசாரியின் சந்ததியேயாவார். இக்கோவிலினுள் வள்ளியம்மன் சிலை, யுள்ளது. ஆனால் அவர்கள் இதனை வெளிப்படையாகச் சொல்லத் தயங்குவார்கள்.

தீர்த்தத் திருவிழாவின் முதல் நாள், வள்ளியம்மன் ஆலயத்தின் முன்னர் கொத்துப் பந்தல் போட்டு, மட்டு நகரத்தார்கள் ஒன்றுகூடி நின்று மட்டக்களப்பார் திருவிழா. என. கொண்டாடுவார்கள். வேலுப்பிள்ளைப் பூசாரி மட்டக்களப்புச் சந்ததி என்பது தெரிந்ததே. அக்காலத்திலிருந்தே இத்திருவிழா நடைபெறுகிறது என்பது தெரிகிறதல்லவா?

> ''கதிர்காம ஆலயத்தின் கூரைமீது ஏறி
> ஓடுகளை மாற்றுபவன் திரும்ப உயிரோடு
> மீளுவதில்லை என்று மக்களிடம் பயங்காட்டி
> படித்த அறிவாளிகளையும் நம்பச் செய்து
> செப்படி வித்தை காட்டும் கோவிலில்
> வாழும் கும்பல்கள் எத்தனை எத்தனைவித
> மாகப் பிரசாரம் செய்யாது?''

திருவிழாக்காலங்களில் ஊர்வலம் வரும்பொழுது வள்ளியம்மன் சந்நிதானத்தில் இப்போதுசெய்யும் சடங்குகளை நீங்கள் கவனிக்கவேண்டும் வள்ளியம்மன் ஆலய நிருவாகம் முழுதும் திரு. பாரிஸ் அப்பு அவர்கட்கேஉரியதாகும் ஆயினும் வருவாயில் ஒரு சிறு பகுதியை பெரிய கோவிலுக்கு கொடுப்பதிலிருந்து அறியக்கிடப்பதென்ன? தமிழர்களே உரிமையாளர் என்பது தெற்றென விளங்கும் திரு. பாரிஸ்அப்பு தன்னை தமிழ்ப் பரம்பரை என்று சொல்லத் தயங்குவதில்லை.

# விஷ்ணு தேவாலயமாக மாறிய பெருமாள் கோவில்

பெருமாள் கோவில் என்று அழைக்கப்பட்டு வரும் மாணிக்கப்பிள்ளையார் கோவிலை அடுத்த விஷ்ணுகோவில் தெய்வானை அம்மன் ஆலயத்தின் ஆதிக்கத்தின் கீழ் 1923-ம் வருடம் வரை இருந்து வந்தது. இது நாம் நேரில் கண்ட உண்மை ஆனல் அதுகாலை கதிர்காமம் செல்லுவ தென்றல் பெர்மிட் அனுமதிப் பத்திரம் வாங்கிக்கொண்டு தான் போகவேண்டும். திருவிழாக்காலங்களில் அதுவும் அங்கவீனர்கள், அசக்தர்கள் காரணமின்றிக் கதிர்காமம் செல்வோர்கள், இவர்கட்கு பெர்மிட் கொடுக்கப்பட மாட்டாது. அச்சமயம் அடர்ந்த காட்டினூடேதான் கதிர்காமம் செல்வோர்கள் கால்நாடையாகப் போக வேண்டும். ஆக 3000க்கும் உள்ளடக்கிய தொகையினரே போய்வருவார்கள். அநேகமாக மேல் பகுதி மக்கள் வெள்ளவாய் புத்தல் வழியாகவும் கொழும்பிலிருந்து வருவோர் திசைமாரா வழியாகவும் வருவார்கள். அக் காலங்களில் காணிக்கை குறைவாகவே வந்திருக்கும் என்று சொல்லவேண்டும். வரும்படியற்று பாழடைந்து கிடந்த பெருமாள் கோவிலை புனருத்தாரணம் செய்து சீர்திருத்திக் கட்டுவதாக அச்சமயம் கிரிவிகார சூரன் கோட்டையை புதுபிக்கும் நோக்கமாக அங்கு வந்திருந்த பௌத்த குரு "தம்மதின்ன பியரத்ன தேரோ" என்பவர் கதிர்காமம் தெய்வானை அம்மன் கோவில் டிரஸ்டாக விருந்த சுகதேவ்புரிபாவா என்பவரிடம் கேட்டு ஒப்பெடுத்து ஆலயத்தின் புதுப்பாகத்தைப் புதுப்பித்துக் கட்டி காணிக்கை வருவாயை உத்தேசித்து சில விக்ரகங்களையும் அமைத்து விஷ்ணு தேவாலய என நாமமிட்டு அவரின் ஆதிக்கததின் கீழ் கொண்டுவந்துவிட்டார். ஆலயத்தை இவரிடம் ஒப்படைத்த ஸ்ரீலஸ்ரீ சுகதேவ் புரிபாவாவும் சில நாட்களில் காலமானர். ஒரு நூறு ஆண்டுகளாக தெய்வானை அம்மன் கோவில் ஆதிக்கத்தில் இருந்து வந்த பெருமாள் கோவிலின் பின்புறம்

ஆறு அறைகள் கட்டப்பட்டிருந்தன. இப்போது பத்தினி தேவாலயம் ஒன்றுமட்டும் இருக்கிறது மீதியுள்ள ஐந்து அறைகளிலும் வள்ளி நாயகியின் அண்ணன் மார்கள் இருந்ததாக ஐதீகம். இப்போது பத்தினி தேவாலயமும் உக்ராண கூரையுமே இருக்கின்றன. மற்றவை பாழ் அடைந்தன.

## பக்கீர் மடம்

இம்மடம் ஏற்பட்டு 135 வருடங்களே ஆகின்றன. இதனை நிறுவியவர் தெய்வானை அம்மன் கோவில் முதல்வராய் இருந்த பால்குடி பாவா (கேசவபுரி பாவா என்பவரின் பெயர்) என்ற பேரன்பர். தன்னுடன் இந்தியாவிலிருந்து வந்து தங்கி இருந்த முஸ்லிம் சந்நியாசி செய்யது ஜப்பார் அலிஷா பாவா என்பவருடன் அளவிறந்த நட்புகொண்டு மதவிசாரணையில் இருவரும் ஈடுபட்டு ஆப்த ஆத்மீக நண்பர்களாக இருந்து வந்தனர். கொஞ்சகாலத்தின் பின்னர் அம்முஸ்லிம் சந்நியாசி பரமபதம் அடைந்தார். அதைக் கண்டதும் பால்குடிபாவா (கேசவபுரி பாவா) முஸ்லிம் சந்நியாசியுடன் தான் கொண்டிருந்த அளவிலா அன்பிற்கிணங்க வள்ளியம்மன் கோவிலில் பக்கமாக ஓரிடத்தில் அவரை நல்லடக்கம் செய்தார்கள். இதன்பின்னர் இம்முஸ்லிம் சந்நியாசியின் (பக்கீர்) வம்சத்தில் வந்தவர் தான் 1945-ம் ஆண்டு காலம் சென்ற மீர் செய்யது முகம்மது அலிஷாபாவா ஆகும். இவர் மேலே சொன்ன தனது குருநாதரின் சமாதியின்பேரின் ஒரு சிறு குடில் போட்டும் பின்னர் ஒருவாறு கட்டுவித்தும்' திருவிழாக் காலங்களில் சகல சகல யாத்திரிகர்களும் வந்து வணங்கும்படியான சில பல காரணங்களும் செய்ய ஆரம்பித்தார். 1922ம் வருடம்வரை தெய்வானை அம்மன் கோவிலில் இருந்துதான் சாப்பாடும் மற்ற உதவிகளும் கொடுத்து வந்தார்கள். இம்மடத்திலுள்ள சமாதியில் பாத்திஹா ஓதுவார்கள்.

இந்து யாத்திரீகர்கள் காவடிகளுடன் மேள தாள வரிசைகளைக் காட்டி சமாதியைச் சுற்றிச் சுற்றி ஆடுவார்கள், அரோகரா என்று அண்டம் அதிர முழங்குவார்கள். இப்படி எல்லாம் ஒருவித மதபேதமின்றி இருந்துவந்திருக்கிறது. 1922-ம் வருடம் வரை கதிர்காமம் போவதென்றால் அனுமதிப்பத்திரம் வாங்கித்தான் போகவேண்டுமென்று கண்டிப்பான சட்டம் இருந்தது. இந்த சமாதியைச் சுற்றி 1945-ம் ஆண்டுவரை திருவிழாக் காலங்களில் தமிழ் மக்கள் அதிலும் கிழக்கு மாகாண மக்கள் (மட்டக்களப்பார்கள்) தங்கி இருந்து பொங்கிப் படைத்து எல்லோரும் உண்பார்கள்- இதெல்லாம் வெட்ட வெளியில்தான்.

கதிர்காமக் கோவிலில் கொடி ஏறியதும் தெய்வானை அம்மன் கோவிலிலிருந்து கொடி கொண்டுவந்து பக்கீர் மடத்தில் நடப்பட்டிருக்கும் கொடிக் கம்பத்தில் கட்டி (இது சேவல் கொடி) கொடியேற்று வைபவம் நடத்துவார்கள். இப்போது செல்லக் கதிர்காமத்திலிருந்து காலஞ்சென்ற இராஜேஸ்வரி கிரிபால தான் இதைச் செய்வார். தெய்வானை அம்மன் கோவில் மகந்துவாக இருக்கும் சுவாமி இராமகிரிஜீ அவர்களையும் கேட்கலாம். வழக்கமும் அதுதான்.

பக்கீர் மடத்தில் இருந்துவந்த பாவா மீர் செய்யது முகம்மது அமிஷா அவர்கள் 1945ல் காலஞ்சென்றதும் இந்த பக்கீர் மடம் பள்ளிவாசல் என்றபெயரால் அழைக்கப்படலாயிற்று. காரணம் எப்படியெனில் கதிர்காமத்தை சர்வே செய்யவந்த அரசினர் உத்தியோகஸ்தர்கள் முஸ்லீம்களின் பள்ளியிடம் என்று ஒரு புதுரிக்கார்டு உண்டாக்கிவிட்டார்கள். இம்மடத்தில் ஏராளமான இந்து யாத்திரீகர்கள் அள்ளிக் கொட்டும் காணிக்கைப் பணத்தை கபளீகரம் பண்ணலாம் என நான் முந்தி நீ முந்தி என்று பலரும் பக்கீர் மடத்தின் உரிமை கோரி கோர்ட்வரை ஏறி வழக்காட முன்வந்தார்கள்.

அம்பாந்தோட்டை மலாய் வாசிகள் (காதிரியாச் சங்கம்) இந்தியாவிலிருந்து வந்த பெரியார் பக்கீர் கமர் தீன் அலிஷாபாவா கள்தான். ஆனால் காலஞ்சென்ற மீர் செய்யது முஹம்மது அலிஷாபவா தான் இறக்கும் தறுவாயில் மரண சாசனம் ஒன்று எழுதி வைத்திருக்கிறார்.

1873ம், வருடத்தில் அம்பந்தோட்டை உதவி அரசாங்கா ஏஜண்டாக இருந்த திரு. டிஸீல் !Tiseel) என்பவர் தனது நிருவாக அறிக்கையில் கதிர்காமத் திருவிழாவைப் பற்றி எழுதியதில் கீழ்க் கண்டவாறு கூறுகிறார். ''கதிர்காமத்திலுள்ள பள்ளி என்ற ஸ்தாபனத்தில் இலங்கையிலுள்ள முஸ்லீம்கட்கு ஒருவித சிரத்தையோ உரிமையோ இல்லை. இந்தியாவிலிருந்து பக்கீர்கள் மட்டும் வந்து போவார்கள். இது முஸ்லீம் மத சம்பந்தமான பள்ளியல்ல தொழுகை ஸ்தலமல்ல) ஒரு பெரியார் அடங்கிய ஸ்தலம்'' என்று எழுதியுள்ளார். நிற்க கொழும்பு தாவூஸ் என்பவர் தானே டிரஸ்ட் ஆக வேண்டுமென்று பதுளை கோர்ட்டில் D. C. 100ம் நம்பர் ஸ்பெஷல் வழக்குத் தொடர்ந்து முஸ்லீம் டிரஸ்ட் ஓடினன்ஸின கீழ் தன்னை டிரஸ்டாக நியமிக்கவேண்டுமென்று மனுப்போட்டார்.

இம்மனுவிற்கு கதிர்காமத்திலுள்ள பெரியகோவில் கப்புராளை திரு. மானிஸ் அப்பு வள்ளி அம்மன் கோவில் கப்புராளை திரு. பாரிஸ் அப்பு. தெய்வானை அம்மன் கோவில் மகந்து சுவாமி இராககிரிஜீ, கதிர்காம கிராம விதானை திரு. தேரிஸ் அப்பு, முத்துலிங்க சுவாமி கோவில் தருமகர்த்தா திரு. பி. கந்தையா. இன்னும் சிலரும் சேர்ந்து மேலே சொன்ன ஸ்தாபனம் முஸ்லீம் பள்ளி அல்ல என்றும், காலஞ்சென்ற மீர் செய்யது முகம்மது அலிஷாபாவா என்ற தனி நபருக்குச் சொந்தமான இடமென்றும், அவரின் சந்ததியைச் சேர்ந்த காலஞ்சென்ற பக்கீர் பெரியாரின் சமாதி என்றும் மேற்படி ஸ்தாபனம் முஸ்லீம்களின் சட்ட பூர்வமான பள்ளி அல்ல

வென்றும், அப்படி அனுமதிக்க முடியாதென்றும் தாவா செய்தார்கள். ஆனுல் ஜனுப் தாயூஸ் என்பவர் மேலே சொன்ன தாவாக்காரர்களை நேரில் கண்டு அவர்களின் கோரிக்கையின்படி தான் நடப்பதாகவும், மேற்படி காலஞ்சென்ற மீர் செய்யது முஹம்மது அலிஷாபாவா சுவீகாரமாகவும், சீடனுகவும் வளர்த்துவந்த ஜனுப் M. S. M. A. முகைதீன் பாவா என்பவரையும் எப்போதும் போல கூட வைத்து பழைய மாமூல்படி நிருவாகத்தை நடத்துவதாக வாக்குறுதி கொடுத்து, தாவா செய்தவர்களை வாதாட விடாமல் தடுத்து தான் கேட்டபடி கோர்ட்டில் முஸ்லீம் சட்டத்திற்கு உட்பட்ட ஸ்தாபனமொன்றே கொண்டு வந்து விட்டார். இப்போது தான் தாவா செய்தவர்கள் தாங்கள் ஏமாற்றப்பட்டதை உணருகிருர்கள்.

1834ம் வருடத்தில் வெளியான அரசாங்க கெஸ்ட்டில் சைமன் காசிச் செட்டி என்பவர் கீழ்க் கண்டவாறு குறிப்பிடுகிருர்.

கதிர்காமத்திற்கு இந்தியாவிலிருந்து வரும் யாத்திரீகர்கள் கங்கா ஜலத்தை மூங்கில் குழாய்களில் அடைத்து வந்து சுவாமிக்கு அபிசேகம் செய்வதாகவும் முஸ்லிம் பக்கீர்கள் சுவாமியின் முன்னர் தீவர்த்திகைப் பந்தம் பிடித்து வருவதாகவும் எழுதி விக்ரகம் உண்டு என்பதை நிரூபிக்கிருர்.

முஸ்லீம் பக்கீர்களை மூர்மென் (Moorman) என்று குறிப்பிட்டிருக்கிருர். இப்படி வரும் இந்தியப் பக்கீர்கள் கடந்த காலங்களில் இங்கேதான் பக்கீர் மடத்தில் தங்கிப் போவது வழக்கம். பத்துவருடங்களில் அப்படியே மாறிவிட்டது. இப்பக்கீர் மடம். யாத்திரீகர்கள் வந்திருந்து தங்கிப் போகுதற்கு தங்குமிடம் கட்டவேண்டுமென்பதை பலமாக ஆதரிக்கிறோம். அது அவசியமாகத் தேவை.

எந்த முஸ்லீமாவது கந்தனின் ஆலயத்திற்குச் சென்று தேங்காய் உடையாமல் கற்பூரம் கொழுத்தாமல் விபூதி பிரசாதம் வாங்காமல் ஆண் பெண் எவரேனும் திரும்புகிறார்களா? யோசியுங்கள். நம்பிக்கைத்தான். ஸ்ரீ கதிர்காமத்தில் பள்ளிவாசல் கட்டி வெள்ளிக்கிழமை அன்று கொத்பா தொழுகை நடக்கும்போது நமது காலடிக்கூட்டம் மேள தாளராக வரிசையைக் காட்டி ஆடினால் பள்ளியினுள் என்ன நடக்குமென எண்ணிப் பாருங்கள். ஆகையால் பின்னால் நடந்தேறும் விபரீத போக்கை இப்போதே சுட்டிக்காட்டி இப்படித்தான் நடக்குமென்று முன் அனுபவத்தையும் மனதிலே எண்ணிச் சொல்லுகிறோம். மக்கள் நன்மையைக் கருதி கருத்தில் கொள்ளுவீர்கள் என்ற திடமான நம்பிக்கைதான். முஸ்லீம் சம்பிரதாயப்படி காரியங்களைச் செய்ய ஆரம்பித்தால் இந்து யாத்திரீகர்கள் பக்கீர் மடத்தின் பக்கமும் திரும்பிப் பாரார்கள். பார்க்கவும் முடியாது என்பதை டிரஸ்டி ஜனாப் S. A. M. தாவூஸ் அவர்கள் குறித்து வைத்துக்கொள்ளவேண்டும்.

ஹயாத்நபி, கிதர்நபி என்றெல்லாம் கொண்டாடி வந்த முருகனை, இது பள்ளி வாசல் என்று சொல்லி முஸ்லீம் மக்களை ஏமாற்றப் பார்ப்பது மகா பாபம். இதனை முஸ்லீம் பேரன்பர்கள் சீர்தூக்கிப் பார்க்கவேண்டும். பள்ளிவாசலில் திருநீறு (விபூதி) சந்தனம். தீர்த்தம் இவைகளை பிரசாதமாக வழங்குகிறீர்களே! இது உங்கள் திருக்குர் ஆனில் எந்த ஆயத்தில் சொல்லப்பட்டிருக்கிறது இன்னும் எவ்வளவோ உண்டு தமிழ் ஆராய்வு இல்லாத சில ஆலீம்கள் பித்துப் பிடித்து கதிர்காம விஷயத்தில் ஈடுபடுவதைக் கண்டு இரங்குகிறோம்.

## முத்துலிங்க சுவாமி கோவில்

இந்தக் கோவில் ஏற்பட்டு சுமார் 200 வருடங்கள் இருக்கும். முத்துலிங்கங்கர் (கல்யாணகிரி சுவாமிகள், இதுவே அவரின் உண்மைப் பெயர்) முருகன் திருவடி

யார், தவசிரேஷ்டர். இவர் சமாதியான இடந்தான் இக்கோவில், இக் கோவில் திரு. பொன்னையா என்பவரின் மகன் திரு. கந்தையாவால் பரிபாலிக்கப்பட்டு வருகிறது. இவர்கள் மட்டக்களப்புப் பரம்பரையைச் சேர்ந்த தமிழர்கள். இக் கோவிலைப் பற்றி எப்படியோ ஒரு கதையைக் கட்டிவிட்டிருக்கிறார்கள். அது பின்வருமாறு: ஸ்ரீ முருகன் கதிர்காமத்துக்கு வந்து வள்ளியைக் கண்டு திருமணம் செய்து இங்கேயே தங்கிவிட்டதாகவும் இதையறிந்த தெய்வானை அம்மன் முத்துலிங்கரைத் தூதனுப்பியதாகவும் முத்துலிங்கர் இந்தியாவிலிருந்து வந்து முருகனைக் கூட்டிப்போக எத்தனித்ததாகவும், இதைக்கண்ட வள்ளி அம்மன் முத்துலிங்கரை வேண்ட அவர் முருகனை ஒரு சக்கரத்துள் அடக்கி வைத்து அதனை கோவிலில் ஸ்தாபித்ததாகவும் அதையே இப்பொழுது பேழையில் வைத்து யானைமீது ஊர்வலமாகக்கொண்டு செல்வதாகவும் முத்துலிங்க சுவாமியும் இங்கேயே இறந்தபடியால் வள்ளியம்மன் கோவில் பக்கமாக சமாதி ஆனதாகவும் கதை. எவ்வளவு தூரம் உண்மை என்பதை அவனே அறிவான். நிற்க,

கதிர்காமத்தில் இப்போது ஏற்பட்டுள்ள கோவில்கள் எத்தனையோ உள்ளன. மடத்திற்கொரு முருகன் கோவில் நவநாகரீக மோஸ்தரில் முருகன் திருவுருவத்திரை முச்சந்தியில் அரசடியில் இருக்கும் அம்மன் கோவிலும், பிள்ளையாரடியும் இதற்குச் சான்று எங்குபார்த்தாலும் காணிக்கை முட்டி பொதுவாகச் சொல்லப்போனால் அது வியாபார ஸ்தலமாகிவிட்டது.

## தெய்வானை அம்மன் கோவில்

இக்கோவிலின் ஆரம்பகர்த்தா சுவாமி கல்யாணகிரி அவர்கள். இவர் ஆறுமுகனை உபாசனை செய்து நிஷ்டையில் இருந்தபடியால் முத்துப்போல் பிரகாசித்தார். இவர் துறவி இவர் சமாதி ஆன இடந்தான் முத்துலிங்கர் கோவில்.

தெய்வானை அம்மன் கோவில் சுற்றுப்பிரகாரத்தில் ஈசுவரர் கோவில் அல்லது வைரவர் கோவில் ஒன்றும் அதையடுத்து கல்யாண மண்டபம் என வழங்கி வந்த குருபீடம் ஒன்றும் அதையடுத்து ஓம குண்டம் ஒன்றும் கோவில் முன் மண்டபத்தில் இருக்கிறது. சுவாமி சந்தோஷ் புரிகாலம் வரை இந்த ஓம குண்டத்தில் அக்கினி வளர்க்கப்பட்டு வந்தது. பின்னர் அந்த ஐதீகம் நின்றுவிட்டது. கோவிலின் மூலகர்த்தாவான கல்யாணகிரியின் பேராலேயே இந்த கல்யாண மண்டபம் நிறுவப்பட்டது. இவரின் பிரதம சீடர் சுவாமி ஜெய சங்கிரி அவர்கள், இவரின் சீடர் சுவாமி ஜெயபால் கிரிஜீ அவர்கள். இவரின் சீடர் சுவாமி ஜெயமால் கிரிஜீ அவர்கள். இவர்கள் வட இந்தியர்கள் ஆனதால் இவர்கள் காலத்தில் வட இந்திய இராஜகுமாரி ஒருவர் தெய்வானை அம்மன் கோவிலில் வந்து இருந்ததாகக் கூறப்படுகிறது. இவ்வரச குமாரியின் பெயர் பாலசுந்தரி அம்மையார். சிங்கள அன்பர்கள் மீனவதி என்று அழைப்பார்களாம். சுவாமி ஜெயபால் கிரிஜீயின் வாரிசு சுவாமி மங்களபுரி' இவர் தெய்வானை அம்மன் கோவில் பேரால் சில காணிகளை வாங்கி வைத்தார். கொங்கட்டியாவத்தை காணி இவராலேயே வாங்கப்பட்டது.

1841ம் வருடம் அம்பாந்தோட்டைக் கச்சேரியில் இந்த விபரங்கள் பதியப்பட்டிருக்கின்றன. இந்தக் காணி பிந்துரானை விதானையிடம் கிரயாசாசனமாக வாங்கப்பட்டது. சுவாமி மங்களபுரியின் சீடர்தான் ஸ்ரீலஸ்ரீ சித்த சுவாமி கேசபுரிஜீ (பால்குடி பாவா) ஆகும். இவர்கள் காலத்தில் மதுகம அக்குறுசிமிலதயனபத்தே பேரிலுள்ள காணி வாங்கப்பட்டது. இன்னும் மகாவலலம் லொட்டுவ, நாராங்வெல வில்லேஜ், உள்ளதயனராவ இந்தக் காணிகளும் மேலே சொன்ன சுவாமி பால்குடி பாவா அவர்களாலேயே வாங்கப்பட்டது.

இவர்கள் காலத்தில் சர். P. அருணசலம் அவர்களின் உதவியால் ஒரு பரம்பரை டிரஸ்டு எழுதி வைக்கப்பட்

டுள்ளது. அதன்படிதான் இதுவரை குருதாத்தாரி பரம்பராவிலுள்ள சீடர்கள் டிரஸ்டியாக இருந்து நடந்து வருகிறது. இவர்கள் இந்துமத வேதாந்தக் கொள்கையுடையவர்கள்.

பால்குடி பாவா என்ற கேசவபுரி சுவாமி அவர்களின் வாரிசு சுவாமி சுரேஷ்புரி அவர்கள். இவரின் சீடர் சுவாமி நாராயணபுரி அவர்கள். இவரின் வாரிசு சுவாமி சந்தோஷ்புரி அவர்கள். டிரஸ்ட்டீடு ஏற்பட்ட பின்னர் ஷை சுவாமியின் சீடர் சுவாமி இரத்தினகிரிபுரி அவர்கள் காலத்தில் தெய்வானை அம்மன் கோவில் புனருத்தரணம் செய்து வைபவம் நடைபெற்றது, அவரின் சீடர் சுகதேவ்புரி காலத்தில் கும்பாபிஷேகம் நடைபெற்றது. பரம்பரா விதிப்படி இவர்களின் பின் சுவாமி கியானகிரி நியமிக்கப்பட்டார்கள். அவர்களின் சீடர் சுவாமி கணேஷ்கிரி அவர்கள் 1934ம் வருடம் பதுளை டிஸ்றிக் கோர்ட் தீர்ப்பின்படி டிரஸ்டியாக நியமிக்கப் பட்டார்கள். 193?ல் இவர் சிவபதம்டைந்தார். அதன் பின் 1940ல் சுவாமி இராமகிரிஜீ நியமிக்கப்பட்டு இப்போதும் இருந்து வருகிறார்கள்.

தெய்வானை அம்மன் கோவில் நிருவாகம் ஒரு கமிட்டியாரால் மேற்பார்வை செய்துவரப்பட்டாலும் கேசபுரி பாவாவினால் எழுதிவைக்கப்பட்ட உறுதியில் தசநமி அக்காடா சாதுக்களில் ஒருவரே மட நிருவாகத்தில் இருக்கப்பட வேண்டுமென்பதை குறிப்பாக எப்போதும் கவனத்தில் வைத்துக்கொள்ள வேண்டும் என்று எழுதியுள்ளார். இக்கோவிலினுள் சிலையுண்டு, ஆடித் திருவிழாவின் போது தீர்த்த விழாவின் முதல் நாள் இரவு கோவிலைத் திறந்து சிலையைத் தரிசிக்க விடுவார்கள். மற்றைய கோவில்களைப் பின்பற்றி இங்கும் திரையிட்டு மறைத்து வைக்கப்பட்டிருக்கிறது. தெய்வானை அம்மன் கோவிலில் இருந்த சுவாமி சுகதேவ்புரி அவர்கள் தான் கதிரை மலைக்குப் போவதற்கு ரோட்டுத்

திருத்தம் செய்தார். அதன் பின்னர் பாதரட்டை சிங்களச் சகோதரர் ஒருவர் பல வருடங்கள் இந்தியாவில் சுற்றுப்பிரயாணம் செய்து இங்குவந்ததும் தனக்குக் கோடாலிச் சாமி எனப் பெயரை வைத்து கதிரைமலைக்கு ரோட்டு வெட்டுகிறேன் என்று ஒரு வாறு ரோட்டு வெட்டியுள்ளாராயினும். அப்பாதை மிகவும் அபாயகரமானது. இந்தக் கோடலிச் சாமியார் யாழ்ப்பாணத்தில் காலமானார்.

கேசபுரி சுவாமி என்ற பால்குடி பாவாவிற்கு பின் தத்துவம் எடுத்துவந்த சுவாமி நாராயணபுரியும் அவரின் சீடர் சந்தோஷ்புரி சுவாமி காலம் வரையும் ஷெ கல்யாண மண்டபத்தில் இருந்து வந்த அக்கினிக் குண்டத்தில் ஓமம் வளர்க்கப்பட்டு வேதபாரணம் செய்வார்கள். அந்த ஐதிகம் நின்றுவிட்டது. புது நிருவாக சபையார் கவனிப்பார்கள் என எண்ணுகிறேன்.

## செல்லக் கதிர்காமம்.

இரண்டாவது நூற்றாண்டிலிருந்து, பத்தாவது நூற்றாண்டுவரை சோழர்களின் ஆட்சி இடையிடையே ஸ்தாபிக்கப்பட்டு வந்தது என்றும், அக்காலத்தில் வேடுவகுல மக்கள் செல்வக் கதிர்காமத்தை அடுத்துள்ள சிற்றூரில் வசித்துவந்தார்கள் என்றும் தெரிகிறது 11-வது நூற்றாண்டில் சோழர்களுக்குப் பயந்து லோக்கா என்ற அரசன் ருஹுணுவின் ஒரு பாகமாகிய செல்லக்கதிர்கமாத்தில் வந்து ஒழித்திருந்தான். அவனுக்குப்பின் ஆண்டுவந்த கேசப்பா என்ற கேசதாத்து ஆறு மாதம் இப்பகுதியில் தங்கி இருந்தானென்றும். அதிகாலை அவனுக்கு எதிராக வந்த சோழர்படையை புறமுதுகுகாட்டி ஓடச் செய்தானென்றும் பின்னர், கிட்டி என்ற அரசன் படையெடுத்து வந்து அவனைக் கொன்று, ருஹுணு என்ற பகுதிக்கு கவர்னர் ஆனான் என்றும் மகாவம்ஸ அத். 57ல் சொல்லப்பட்டிருக்கிறது. அதே அரசன்தான் பொலனறுவையை ஆட்சிபுரிந்த விஜயபாகு என்றும்

சொல்லப்படுகிறது. இப்போழுதும் செல்லக்கதிர்காமத்தில் இருந்து 4, 5. மைல் சுற்று வட்டாரத்திலுள்ள பழமையான கட்டிடங்களின் துண்டு துணுக்குகளான செங்கல் கற்களும், கருங்கல் கற்களும் ஏராளமாக மாணிக்க கங்கை கரைகளில் ஓர மாகக்கக் காணலாம்.

இந்த சிற்றூரிலிருந்து ஆட்சிபுரிந்துவந்த 'லோக்கா' 'கேசாத்து' ஆகிய இவ்விரு அரசர்களால் அப்பகுதியில் இருந்த வேடுவத் தலைவர்கள் அடக்கப்பட்டு, சாதாரண மக்கள்களாக ஆக்கப்பட்டார்கள். ஆகவே செல்லக்கதிர்காமம் ஓர் பழம் பதியேயாகும். இதற்கு சின்னக்கதிர்காமம் என்ற பெயரும் உண்டு. தெய்வானை அம்மன் கோவில் நிருவாகத்திலேயே இப்போதும் நடந்து வருகிறது.

## கதிரை மலை

கதிரை மலைக்கு பொதுமக்கள் போய்வர ஆரம்பித்தெல்லாம் அனேகமாக 1923ம் ஆண்டின் பின்னரேயாகும்.

உண்மையிலேயே கதிரை மலைக்குப் போவதானல் கொஞ்சம் கடினமான பாதைகளைக் கடக்கவேண்டியிருந்தால் சாதாரணமாக எவரும் அங்கு போவதில்லை.

இங்கு ஓர் வேல் மட்டும் மலை உச்சியில் நாட்டி வைக்கப்படிருந்தது. தெய்வானை அம்மன் கோவில் மகந்துவாகவிருந்து சுவாமி ககதேவ்புரி அவர்கள் காலத்தில் எல்லா பக்தர்களும் கதிரைமலை உச்சியை அடைந்து முருகனைத் தரிசித்து இன்புற எண்ணங்கொண்டு ஓர் பாதை புதிதாக வெட்டப்பட்டது. பின்னர் பாத்ரட்டை சிங்களச் சகோதரர் ஒருவர் பல வருடங்கள் இந்தியாவில் சுற்றுப்பிரயாணம் செய்துவிட்டு இங்கு வந்ததும், தனது பெயரை கோடாலிச்சாமி என மாற்றிக்கொண்டு கதிர்காமத்திலிருந்து கதிரை மலைக்கு

ரோட்டு வெட்டினூர். இப்போது யாத்ரீகர்கள் போய்வரும் பாதை அதுதான். சிற்சில இடங்கள் இப்போது மாற்றப் பட்டிருக்கின்றன.

1955ம் ஆண்டிற்குப் பின் கதிரைமலையில் நடந்து வரும் புதினம் என்னவென்றால் இந்துக்களின் வேலாயுதத்திற்கு அப்பால் புத்தர் சிலையொன்றும் அரசங்கன்றும் உற்பத்தி பண்ணப்பட்டு, சதா ஒரு பிக்குவும் இருந்துவர ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

கதிரை மலையின் மகத்துவத்தை விளக்கந்தந்து எழுதுவதென்றால் அது ஒரு பெரிய தத்துவார்த்த வடிவமாக பெருகிப் பலநூறு பக்கங்களைக் கொண்ட பிரபந்தமாக முடியும்.

கதிர்காம ஆலயம் தோன்றிய காலத்தேயே கதிரை மலையும் விளங்கிச் சிறந்திருக்க வேண்டும். ஆகவே பழம் பெரும் பகுதியை இதற்குமேல் விளக்கிக் கூறவேண்டியதில்லை. எனவே இத்துடன் நிறுத்துகிறோம்.

கதிரை மலையைப் பற்றி எத்தனையோ பாடல்கள் பக்திப் பரவசத்தால் பற்பல பெரியார்களால் அந்தந்த காலங்களில் பாடப்பட்டு வந்துள்ளன என்பது குறிப்பிடத்தக்கது,

இதில் 'கதிரைமலைப் பள்ளு' எனும் சிறந்த கவிதைகள் எத்தனை பக்திப் பரவசம் என்பதை எடுத்துக்காட்டும்.

## விபூதி மலை

திருக் கதிரையம்பதியில் விபூதி மலையைப் பற்றி காற்றேடு கலந்துவரும் கதைகள் பற்பலவுண்டு கதிர்காம ஆலயத்திலிருந்து சிறிது தூரத்தில் இருக்கிறது இம்மலை விபூதி மலையைப்பற்றிய சரிதம் அவ்வளவு விரிவாகக் கிடைக்கவில்லை. ஆயினும், கச்சாயூர் செந்தமிழ்

புலவரும், முருக உபாசகருமான உயர்திரு. சி. சின்னையா அவர்கள். எழுதிய "எங்கள் கதிர்காமம்" எனும் நூலில் கூறும். 37ம், 38ம், 39,ம் 40ம் பாடல்களை ஓர்ந்தால், விபூதி மலையின் கால எல்லையைக் குறித்துக்கொள்ளலாம்.

37ம் விருத்தத்தில் அறுதி இட்டுக் கூறுகிறார்.

"தத்தமக்கொரு தனிச்சிறப்புளகுறி சமயம்
வைத்திருப்பது பேருலகிலியன்றிடும் வழக்கே
இத்தரைப்பெறு பவுத்தர்கைப் பற்றுவரென்றே
வைத்தனன் திருநீற்றை மலையென வள்ளல்"

என்றும் 38-ம் பாடலில்:-

"உலகமுள்ள வொழிந்திடாதுறத்திரு நீற்றை
மலையின் வைத்தலிற் தென்கதிர் காமத்தை வையம்
இலகுவாகவே சைவநற் சேத்திரமென்று
நிலைநிறுத்திடும் வேறுபால் சாட்சியேனெடிதே"

என விபூதிமலையின் சிறப்பை விளக்கி சைவநற் சேத்திரமெனக் கூறிவிட்டு, அரசியலிற் புகுந்து 39ம் விருத்தில்;-

"சைவமாதி கண்டறிதலில் லாததுஞ் சைவர்
தெய்வம் வேற்கர முருகனுமெனு முண்மை திடமே
வையம் கண்டிடக் கதிரையையடம் புரிவார்கள்
நைவர் நீங்குவர் காணுக, யாவரும் நயந்தே"

எனச் சொன்ன புலவர் அவர்கள், 40ம் செய்யுளில் நல்ல ஒரு முடிவிற்கும் வந்துள்ளார்கள் உறுதிப்படுத்தி உணர்ச்சியோடு தயவாகக் கேட்கிறார்கள்.

சைவநன்னிருவாக மதுறும்வரை தயவு
செய்து தென கதிராபுரி யாத்திரை செய்த
லையயாவருந் தமிழர்கள் நிறுத்துக வயிலோன்
செய்வன் மற்றைய தலங்களிலருண் மிகத்திடமே.

மேலே கண்ட விருத்தங்களிலிருந்து விபூதிமலை முருக நாமம் பரிணமித்த அந்நாளிலேயே இருந்து வந்துள்ளது என்பது தெரியவருகின்றது.

கதிரை மலைக்கு 1922ம் ஆண்டின் பின்னர் எல்லோரும் போய்வர ஆரம்பித்த காலத்தில் தான் விபூதி மலையையும் மக்கள் சென்று வணங்கி விபூதியையும் எடுத்து வரலானார்கள். என்பதுதான் பொருந்தும்.

கடந்த 53. ஆண்டுகளாக லக்ஷக்கணக்கான யாத்திரீகர்கள் சராசரி 10 ருத்தல் வீதம் தோண்டித் தோண்டி எடுத்து வந்தும் கூட இன்னும் அதன் நிலை கலையவே இல்லை. இவ்வருடம் தோண்டிய இடம் ஒரு குகைபோல இருக்கும் மறுவருடம் அந்த இடம் வளர்ச்சியடைந்து மலையோடு மலையாகவே வளர்ந்திருக்குமாப்போல் தெரியும், வளர்கிறதுபோலும்! ஒரு வித மாற்றம் ஏற்படுகிறது. இதனை இதுவரை மண்வள ஆராய்வினர் ஏனோ விட்டுவைத்திருக்கின்றனர்.

இப்போதெல்லாம் யாத்திரீகர்கள் அவ்வளவாக விபூதி மலைக்குப் போவதில்லை. விபூதிமலையை வெட்டி டெரான் கணக்கில் வண்டியில் கொண்டுவந்து கொட்டி மாவாக ஆக்கி விற்பனை செய்யும்குழுவினர்கள் கதிர்காமத்தில் மட்டும் 20-30 குடும்பங்கள் உண்டு. ஒரு கொத்து விபூதி சில நேரங்களில் 1 ரூபாயிலிருந்து 2½ ரூபா வரை விற்பனையாகும்.

கற்பூரம் வைத்தெரித்த கதிர்காமத்திரு முருகன்
பொற் பதத்தில் வைத்தெடுத்த புனிதத்திருநீறு.

என மதுரை கவியின், திருவாக்கைக் கூறி விபூதிமலையப் பற்றிய விபரத்தை இத்துடன் முடிப்போம்.

## நாட்டுக்கோட்டை நகரத்தார்களும் ஸ்ரீ கதிர்காமமும்

தனவைசியர்கள் காவிரிப்பூம் பட்டினம் கடல் கொண்ட காலத்தின் பின் அவர்கள் உள்நாட்டில் கோட்டை கட்டி வாழ்ந்தார்கள் என்றும் அதனால் "நாட்டுக்கோட்டையார்" என அழைக்கப்பட்ட தாயும் காணக்கிடக்கிறது. சோழ தேசத்தை விட்டு இவர்கள் பாண்டிய நாட்டில் குடியேறியதை விரிக்கிற் பெருகும்.

இவர்கள் வாழ்ந்த பாண்டிய நாட்டுப் பகுதிகளில் ஒவ்வொரு இடத்தும் கோவில் கட்டி அதற்காக ஏராளமான மான்யங்களையும் வழங்கியுள்ளார்கள். தென் இந்தியாவில் உள்ள அனேக கோவில்களைப் புதுப்பித்தும் புதிது புதிதாகக் கட்டியும் உள்ளதை இன்றும் பார்க்கிறோம்.

திரை கடலோடியும் திரவியம் தேடு என்பதற்கொப்ப வெளிநாடுகளில் வாணிபத்தின் நிமித்தமாக சென்ற விடத்தும் ஆங்காங்கு பிரமாண்டமான ஆலயங்களை அமைத்துத் தம் குலக் கடவுளாகிய முருகனை வணங்கி வந்தார்கள் என்பது கண்கூடு.

இராஜாதி இராசசிங்கன் காலத்திலேயே (சேர, சோழ, பாண்டியர்களின் ஆட்சிக் காலத்தில்) தனவைசியர்கள் இலங்கைக்கு வந்துள்ளார்கள் எனத் தெரிகிறது. இலங்கையில் பல பகுதிகளிலும் முருகன் ஆலயங்களைக் கட்டியும் அதன் நிருவாகத்திற்காக மான்யங்களையும் ஒதுக்கி வைத்திருக்கிறார்கள். ஆனால் பழம் பெருமை பொருந்திய ஸ்ரீ கதிர்காம ஆலயத்தையும் மறந்தார்களில்லை. பிரிட்டிஷ் ஆட்சியின் பின்னர், சுமார் 150 வருடங்களுக்குள் முதலில் லேவாதேவி, மொத்த வர்த்தகம் ஏற்றுமதி, இறக்குமதி பூராவும் தனவைசியர் கையிலேயே இருந்து வந்தது. அக்காலங்களில் கொழும்பு செட்டியார் தெருவில் வேறு எவருமே குடியிருந்ததில்லை. அவ்வளவு மும்முரமாக மொத்த வர்த்தகம், பலசரக்கு புடவை முதலியன இறக்குமதி செய்வதும், கோப்பி, பாக்கு, ஏலம், கிராம்பு முதலியன ஏற்றுமதியும் செய்வார்கள்.

கரையோரப் பகுதிகளிலும், மலைநாட்டுப் பகுதிகளிலும் தனவைசியர்கள் தங்கள் வியாபாரத்தைச் செய்து வந்தார்கள். ஆங்காங்கு கோப்பி, கறுவா, கொய்னு, கொக்கோ, ஏலம் ஜாதிக்காய் முதலியவைகளை உற்பத்தி செய்தவர்கள் தனவைசியர்களும் ஆங்

கிலேயக் கம்பெனிகளுமேயாகும். அக்காலத்து தாங்கள் வாழ்ந்த மலைநாட்டுப் பிரதேசங்களிலும் முருகன் ஆலயங்களையும் ஸ்தாபித்தார்கள். (உ - க) கண்டியில் கட்டுக்கலை செல்வ விநாயகர் ஆலயம். கம்பளை, புஸ்ஸல்லாவ, நாவலப்பிட்டி அழுதமுல்லை, பதுளை (பன்னுகமம்) மாத்தளை, காலி, நீர்கொழும்பு, குருநாக்கல் முதலிய நகரங்களிலுள்ள முருகன் ஆலயங்களே சான்றாகும். அக்காலம் கதிர்காம உற்சவம் ஆரம்பமானதும் மேலே சொன்ன ஊர்களிலிருந்து வேல் கொண்டுபோவார்கள். ஒவ்வொரு ஊர்களிலிருந்தும் வேல் கொண்டு போகும் போது ஆங்காங்குள்ள யாத்ரீகர்களும் கூடவே கூட்டமாகப் போவார்கள். இக்கூட்டம் பகல் ஒருவேளை போஜனம் சமைத்துச் சாப்பிட்டு தங்கித் தங்கிப் போகும். கால்நடையாகப் போவதினால் அடியார்கள் கூட்டமும் பெருகிக்கொண்டே வரும்.

1858-ம் வருடம் வரை இப்படியே நடந்துவந்தது 1858-ம் வருடத்தில் யாத்ரீகர்கட்கிடையில் காலரா, காய்ச்சல் இவைகள் காணப்பட்டன. காரணம் என்னவெனில் வேல் கொண்டுபோகும் கூட்டத்துடன் கூடிப் போகும் அடியார்கள் கூட்டம் ஆங்காங்கு கிடைக்கும் செப்புப் பாத்திரங்களில் சமைக்கும் சாதங்களை வாங்கிப் புசித்தும், மீதியை வைத்து இரவில் உண்ணுவதாலும், வெயில், கால்நடை, திறந்தவெளி நித்திரை, முதலியகளைப்பினிடையே கண்ட கண்ட நீரை உண்டு காலரா நோய் கண்டு அனேக யாத்ரீகர்கள் மாண்டு போனார்கள்.

இதன்பின் அரசாங்கம் கதிர்காம யாத்திரை போவோரைக் கட்டுப்படுத்த 'பெர்மிட்' அனுமதிச்சீட்டு முறையை மேலே சொன்ன காரணங்கட்காக ஏற்படுத்தியது. அந்தந்தப்பகுதி அரசாங்க ஏஜண்டுகள் மூலமே இந்தப 'பெர்மிட்' வழங்கப்பட்டது. சுமார் 2000 பேர்கள் வரை இலங்கை எங்குமிருந்தும் செல்லலாம் எனக் கட்டுப்படுத்தப்பட்டது. வயது வந்த கிழவர்களோ,

அசக்தர்களோ முஸ்லீம்களோ அக்காலத்தில் கதிரையம்பதிக்கு யாத்திரை செய்வதில்லை. 1871-ம் வருடம் யாத்திரை சென்றவர்கள் 2000 பேர்களே. 1872-ம் வருடம் யாத்திரை சென்றவர்கள் 5000 பேர்கள். 1873-ம் வருடம் அத்தொகை 8000 ஆகவும் உயர்ந்தது. இந்நேரங்களில் இருக்கும் சீதோஷ்ண நிலையைப் பொறுத்து பெர்மிட் வழங்கி வந்தார்கள். (மேலே கண்ட உண்மைகளை அம்பாந்தோட்டை அரசாங்க ஏஜன்ட் தமது 1873-ம் வருட அறிக்கையில் (ரிப்போர்ட்) குறிப்பிட்டிருக்கிறார்.

இந்த அனுமதிச்சீட்டு 1922-ம் வருடம் வரை அமுலில் இருந்து வந்தது. அதன் பின்னரே நிறுத்தப்பட்டது. ஒவ்வொரு ஊரிலிருந்தும் வேல் கொண்டுபோகும் தனவைசியா கூட்டம் 18?3 ல் கோவிலைச் சுற்றிக் கட்டப்பட்டிருக்கும் பெரிய சுற்றுமதிலைக் கட்ட ஏற்பாடு செய்தது. 1840-ம வருடத்திலேயே தனவைசியர்கள் தாங்கள் ஸ்ரீ கதிர்காமம் சென்றால் தங்கி இருக்க வசதியாக ஓர் மடம் கட்டி வைத்துவிட்டார்கள். மேலே சொன்ன பெரிய கோவில் சுற்றுமதிலை தனவைசியர்கள் கட்டி வைத்தார்கள் என்பது இன்று அனேகருக்குத் தெரியாது. அக்காலத்தில் அரசடியில் கோவில் மட்டும் இருந்ததே தவிர வேறு ஒன்றும் இருக்கவில்லை.

ஸ்ரீ கதிர்காமத்தில் 1873-ம் தனவைசியர்கள் பெரிய கோவில் சுற்றுமதிலைக் கட்டிய பிறகே, ஸ்ரீ கதிர்காமத்தில் ஏனைய மடங்கள் தோன்றலாயின 19?5-ல் மட்டக்களப்பு திரு. கே. வி மார்க்கண்டு என்பார் மடம் கட்டுவித்தார். அதையடுத்து சடையம்மா மடம் கட்டப்பட்டது. அதன்பிறகே ஒவ்வொரு மடங்களும் தோன்றலாயின. பெரியகோவிலைச் சுற்றிக் கட்டப்பட்டிருக்கும் திருமதிலின் முன் முகப்பு வாசலைத் கூர்ந்து கவனிக்க வேண்டும். மேலே பூர்ண கும்பக் கலசம், நடுவில் பிரிட்டிஷ் ஆட்சியின் சின்னம், அதையடுத்து

நான்கு மூலைகளிலும் நந்தியின் உருவம். சுவாமி ஊர் வலம் வரும்போது செட்டியார் மடத்தின் முன்னும் பின்னும் தீப ஆராதனை நடைபெறுவதை நாம் இன்றும் காணலாம்.

## பழந்தமிழரும் சிங்கள பாஷை உற்பத்தியும்

இற்றைக்கு 2115 ஆண்டுகளுக்கு முன் நீதியான ஆட்சி புரிந்து வந்த எல்லாளன் என்ற தமிழ் சக்கர வர்த்திக்கும், தமிழ்த் தாயின் வம்ச பரம்பரையிலிருந்து மூன்று நான்கு தலைமுறைக்குப் பின் சிங்களவரான காவந்திஸ்ஸ (காவந்தீசன்) என்ற சிற்றரசனின் மகன் துட்டகைமுனுவுக்கும் இடையில் நடந்த யுத்தத்திற் காகக் கையாளப்பட்ட இராஜதந்திரமே இப்படி இரு சகோதரர்களையும் சிங்களவர் தமிழர் எனப் பிரித்துக் கூறுபடுத்தியதே தவிர இரு சகோதரர்களும் ஓரினத்துச் சாதிகள்.

சுமார் 2460 வருடங்களுக்கு முன் வந்த ஆரிய அரசன் விஜயன் சிங் என்ற வகுப்பைச் சார்ந்தவன். மகத தேசத்தைச் சார்ந்தவன். இவன் அன்னை வழி மூதாதையர்கள் வங்கம், கலிங்கம், சுமட்ரா முதலிய இடங்களை ஆட்சி புரிந்து சிம்மக் கொடியுடன் விளங்கினார்களென்று சரித்திரம் சொல்லுகிறது.

விஜயனின் தந்தையாகிய சிங்கபாகுவை ஈன்றெடுத்தவன் 'சிகு' என்பான். அரச வம்சத்தைச் சாராதவன். கொடிய துஷ்டன். இத் துஷ்டன் செய்த கொலைகளும், கொள்ளைகளும், அட்டகாசங்களும் அனந்தம். ஆகவே அரசனால் கொலை செய்யும்படி ஆக்ஞை பிறந்தது உடனே அவன் மகன் சிங்கபாகுவினாலேயே கொலை செய்யப்பட்டான். இது இந்திய சரிதையில் விரிவாகக் காணலாம். ஆனால் இலங்கைச் சரிதம் பகுத்தறிவிற்கு ஒவ்வாது எழுதப்படடுள்ளது.

தந்தையாகிய சிகு என்பானை கொலை செய்த தனையன் சிங்கபாகுவிற்குப் பட்டம் கிடைத்தது; அந்தக் கொலையாளியின் புத்திரர்களில் மூத்தவனுன விஜயனே இலங்கையில் முதல் மன்னனுன். விஜயன், தந்தையைப் போல் மகன் என்பதற்கொப்ப மகா துஷ்டத்தனமுடையவன். அவன் தந்தை சிங்கபாகுவினுல் நாடுகடத்தப்பட்டான். ஆகவே விஜனும் அவன் சகாக்கள் 700 பேர்களும் இத்தீவிற்கு அழையா விருந்தினர்களாக (கள்ள) தோணியில்தான் வந்தார்கள்.

விஜயன் தன் பாய்க்கப்பலை விட்டு கரையில் இறங்குமுன் அவன் சகாக்களில் முக்கால்வாசிப்பேர் கரையில் இறங்கிவிட்டார்கள். கரையில் இறங்கியவர்களில் பலரை இங்கிருந்த அரசி குவேனியின் ஆட்கள் சிறைப்பிடித்தும், மீறியவரைக் கொன்றும் விடவே கடைசியில் விஜயன் இறங்கினுன். விஜயனின் முன் குவேனி தோன்றவும், இருவருக்கும் வாக்குவாதம் ஏற்பட்டு பின்னர் அது எப்படியோ மண ஒப்பந்தமாக மாறிவிட்டது. அரசி குவேனியின் உதவியினுல், சேர சோழ, பாண்டிய மன்னாகளின் உதவியும் கிடடியது. விஜயன் ஆட்சிப் பீடத்திலமர்ந்து நாட்டைப் பரிபாலிக்கத் தொடங்கினுன்.

இலங்கைத் தீவும் அதன் தாய்நாடான இந்தியாவும் ஏறக்குறைய 3600 வருடங்களுக்கு முன்னர் சமுத்திரப் பிரிவில்லாத ஒரே நாடாக இருந்தது. அதன்பின் ஏற்பட்ட ஜலப்பிரளயத்தினுல் பிரிவு ஏற்பட்டபோதிலும் ஓரிரு மணிததியாலங்களில் கடந்து செல்லும் தூரத்திலேயே இருந்தது. ஆகவே அணிந்துள்ள பாண்டிய மன்னன் தனது புத்திரியை விஜயனுக்குத் திருமணம் முடித்துக் கொடுத்ததில் ஆச்சரியமில்லை. விஜயனின் சகாக்களுக்கும் தம் நாட்டு நங்கை நல்லாள்களை மணமுடித்துக் கொடுத்தும், நாட்டை வளம்பெறச் செய்வான் வேண்டிய பிரஜைகளையும், தானியாதிகளையும் தந்துதவினுன். அவ்வாறே சேரனும், சோழனும உத

வியபடியால் இந் நாடு செந்நெல் விளையும் தேசமாகியது.

இந் நாட்டில் குடியேறிய மூவேந்தர் குல மக்களுள் தமிழர், தெலுங்கர். கன்னடியர், மராட்டியர், மலையாளர் முதலாய மக்களாவர். இவர்களின் பாஷை 5 விதமாக இருந்தது. விஜயனின் பாஷை இந்தி ஆக 6 பாஷைகளோடு ஆட்சி புரியவேண்டியிருந்த கஷ்டத்தை நிவர்த்திப்பான் வேண்டி சிங்ஹ-லே என ஒரு புதுப் பாஷையை திராவிட ஆசிரியர்கள் உதவியைக் கொண்டு தனிப் பாஷையாக்கினான். இங்கு குடியேறிய மக்களுள் பெரும்பாலோர் தமிழர்கள் ஆனதினாலும், விஜயனின் பட்டத்தரிசி பாண்டியனின் புத்திரி ஆனதினாலும், தமிழிலிருந்தே சிங்களத்தை உற்பத்தி செய்யவேண்டியதாயிறறு. சூழ்நிலை அப்படித்தானே இருந்திருக்கும்.

அதற்கு இதோ உதாரணம் பார்மின்:

ஆனு, ஆவன்னு, இனு, ஈயன்னு, என்பதற்கு.

அயன்ன, ஆயன்ன, இயன்ன, ஈயன்ன என்றும் அ. க. ங. ச. என்பதற்கு அயன்ன, கயன்ன, ஙயன்ன, சயன்ன என்றும் இவ்வாறே எல்லா அக்ஷரங்களையும் தமிழிலிருந்தே எடுத்து ஞ என்று வரும் சப்தத்தை யஅ ணா என்று அமைக்கலானுன். ஆனல் விஜயன் வடமொழி பேசுவோன் ஆனதினாலும், அம்மொழியின் சப்தம் அநேகமாக உரத்த தெனியுடையதானதினாலும், தென் மொழியாகிய தமிழ் அமைதியும், சாந்தமும் அழுத்தமற்ற அக்ஷரத் தொடர்புடையதாயிருந்தபடியால சிற்சில அழுத்தமான வசனங்களை உச்சரிப்பான் வேண்டி வடமொழியிலிருந்து ச என்ற தமிழ் எழுத்திற்குப் பிரதியாக ஷ, ஸ க்ஷ. என்ற எழுத்துகளை கூட்டியும், க, ட, த ப, என்ற எழுத்துக்களுக்கு உத்தண்டமான சப்தம் தரக்கூடிய எழுத்துக்களைக் கூட்டியும், சிங்கள அக்ஷரங்களை ஆக்கி எழுத்துக்களின் வடிவத்தை

தெலுங்கு, மலையாள எழுத்துக்களைப்போல் அமைக்கலானான்.

சிங்களத்தை ஒரு தனிப்பாஷையாக ஆக்கியபோதும் அதில் இன்னும் ஏராளமான தமிழ்ப் பெயர்களும், வசனங்களும் பொதிந்து கிடப்பதைக் காணலாம். செப்பு, படிக்கம் என்பதை செம்புவ, படிக்கம என்றும், கொத்தமல்லி பருப்பு என்பதை கொத்தமல்லி, பருப்புவ என்றும், வெண்டக்காய், முருங்கக்காய் என்பதை பண்டக்கா, முருங்கா என்றும் சுத்தம், அசுத்தம் என்பதை சுத்த, அசுத்த என்றும் பயம், பாவம் என்பதை பய, பாவ என்றும் இவ்வாறு எண்ணற்ற வார்த்தைகள் இணைக்கப்பட்டிருப்பதைப் பார்க்கலாம்.

ஆகவே சிங்களம் தமிழிலிருந்தும், சிங்களவர்கள் தென்னாட்டு வம்ச பரம்பரையிலிருந்தும் தோன்றியவர்கள் என்பது தெளிவாகிறதன்றோ.

| | | | |
|---|---|---|---|
| அ | ஆ | இ | ஈ |
| අ | ආ | ඉ | ඊ |

அயனு ஆயனு இயனு ஈயனு

ன என்ற ஓசை யனு என்ற உச்சரிப்பே தவிர வேறு ஒன்றில்லை. இப்போது கீழ்ப்பகுதி சிங்களத்தார் யனு என்ற உச்சரிப்பை யன்ன என்று வழங்குகிறார்கள்.

மாப்பிராண: என்பதற்காகக் கீழேயுள்ள நான்கு எழுத்துக்கட்கும் வடமொழிப்படி சபதத்தை உண்டுபண்ண (க. ச. ட. ப.) என்பவைகட்கு 16 எழுத்துக்களை உண்டுபண்ணி விட்டார்கள். இங்குள்ள சிங்கள மக்கள் சேர சோழ பாண்டிநாட்டு மக்களே தவிர வேறென்றில்லை. பாஷையின் தொனியில் சிறு வேறுபாடே தவிர நமக்கும் அவர்கட்கும் என்ன வித்தியாசம். விசாலமா

கப் பரந்த ஆலோசனையில் அறிவைச் செலுத்திச் சீர் தூக்கிப் பார்த்தால் ல்லாம் புலப்படும்.

இலங்கையில் வாசம் செய்த குவேனியின் வயிற்றில் பிறந்தவர்கள் ஓர் ஆணும் ஓர் பெண்ணுமேயாகும். இவர்கள் விகாரத் தோற்றமுடையவர்களானதினுலும் பாண்டிய இராஜகுமாரியை விஜயன் மணந்து பட்டத் தரசியாக்கியதாலும் அதன் காரணமாய் குவேனிக்கெழுந்த பொருமையின் காரணமாய் விஜயனுல் காட்டிற்குத் துரத்தப்பட்டார்கள். அவ்வழிச சந்ததியாரே இன்று வனவாசம் செய்துவரும் காட்டாளர்கள் (வேடர்கள்) ஆவர். சிங்களச் சகோதரர்கள் அவ்வழித் தோன்றல் என்றுலும் பொருந்தும். ஆனுல் அப்படிச் சொல்ல வெட்கம். தமிழகத்தின் சந்ததியார் என்று சொல்லவும் வெட்கம். ஆட்சி புரிய நூற்றுக்கணக்கான மைல்களுக்கு அப்பால் இருந்து வந்த ஆரியரில் இருந்து தோன்றியவர்கள் என்று சொல்லுகிருர்கள். தற்காலத்தில் ஆட்சி புரிந்த டச்சு, ஆங்கிலேயர் என்று சொல்லவும் முற்படுவார்கள் போலும் என்னே!

ஆளப்படுவோரின் மதம் எதுவோ அதனையே பின்பற்ற வேண்டுமென்பது ஒரு புராதன வழக்கம். விஜய, பண்டுவஸ்தேவ. அபய, பண்டுகபாய முதலிய ஆரிய அரசர்கள் ஆண்டுவந்த 236 வருடங்களும் சிவ மதமே பொதுவாக இருந்தது.

தேவநம்பியதிஸ்ஸ: என்ற அரசன் காலத்தில் அசோகச் சக்கரவர்த்தியின் புத்திரர் மஹிந்தா என்ற புத்த சந்நியாசி இலங்கைக்கு வந்து, அஹிம்சையை அடிப்படையாகக் கொண்ட பௌத்த மதத்தைப் பரப்பினுர். அவரையடுத்து அவரின் சகோதரி சங்கமித்தா என்ற பிக்ஷுணி புத்தகயாவிலிருந்து வெள்ளரசு மரக்கிளையை கொண்டு வந்து பிரதிஷ்டை பண்ணினுர்.

எது வேண்டும்?

நேரில் சென்று கேளுங்கள்.

★ பள்ளிக்கூட புஸ்தகங்கள்

★ பத்திரிகைகள்

★ பாட்டா சப்பாத்துகள்

★ பெட்ரி வகைகள்

★ வெண்கல சாமான்கள்

★ அலுமீனிய பாத்திரங்கள்

★ சாப்பு சாமான்கள்

முதலியன சில்லரையாகவும் மொத்த மாகவும் பெற்றுக் கொள்ளலாம்.

ராஜா ஸ்டோர்ஸ்

71, மெயின் வீதி,

அட்டன்

போன்: 377

தலை நகரில் தலை சிறந்த
நவ நாகரீகத் தையல் கலை

Aoortex

எம்மிடம்

பேபி ஷேர்ட் & சிறுவர் ஷேர்ட், கால்சட்டை,
பெரியவர்களின் ஷேர்ட், கால்சட்டை,
பெண்களுக்கான சட்டை, கவுண்
முதலியவைகள் மொத்தமாகவும் சில்லறையா
கவும் பெற்றுக்கொள்ளாம்.

தயாரிப்பாளர்

புஷ்பா டிரேடர்ஸ்

139, 4-ம் குறுக்குத் தெரு,
கொழும்பு-11.


அச்சிட்டது நியூ லீலா அச்சகம், கொழும்பு-12